Registered as a news paper.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்



இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.] (சி/2494)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 06 (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:296

# வன்முறைகளை கட்டுப்படுத்தாவிடின் யுத்தநிறுத்த உடன்பாடு முறிந்துவிடும்!

## நெருப்புடன் விளையாட வேண்டாம் எனவும் ஹெல்கிசன் எச்சரிக்கை!

(கொழும்பு)



**இலங்கையில் தற்போது அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்தத் தவறினால் தளம்பல் நிலையை அடைந்திருக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கை முறிவடைந்துவிடும். அத்துடன் மீண்டும் உள்நாட்டு யுத்தத்துக்கு நாடு தள்ளப்பட்டுவிடும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க முடியுமா என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டிருப்பதாகவும், நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.**

**அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது –**

இலங்கையில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற சம்பவங்கள் என்பன மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

சில சக்திகள் நெருப்புடன் விளையாடுவது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இது மிகவும் ஆபத்தானது. நெருப்புடன் விளையாடுவோரால் பல சம்பவங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் உறுதியாக இருப்பதாக, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கூறியுள்ளனர். எனினும் களநிலவரங்களில் தோன்றியுள்ள ஸ்திரமற்ற தன்மை சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உயர்மட்டப் பேச்சுக்கள் நடத்தப்படாமல் 16 மாதங்கள் கடந்துவிட்டன.

இந்த நிலையில், இரு தரப்பினருக்கும் இடையில் மிகச் சிறிய அளவிலே நம்பகத் தன்மை நிலவுகிறது. இதனால், அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்க முடியுமா என்பது குறித்து உறுதியாகக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மட்டு - அம்பாறையில் இருவர் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையிலும் இரண்டு இளைஞர்கள் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூரிலும், நேற்று அதிகாலை அம்பாறை மாவட்டத்தலுள்ள பாண்டிரிப்பிலும் படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

மண்டூரில் நேற்று முன்தினம் இரவு அழகையா கிருபராசா (வயது20) என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார். நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டுக்குச் சென்ற அடையாளம் தெரியாத (12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன காசாளர் சடலமாகக் கண்டுபிடிப்பு!

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் காணாமற்போன மானிப்பாய் மக்கள் வங்கிக் கிளையின் காசாளர் பஞ்சலிங்கம் (வயது -55) நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் அராலி கொட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டதாக மானிப்பாய் பொலிஸார் இன்று அதிகாலை தெரிவித்தனர்.

இவரது சடலத்தை மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி இளங்கோவன் இன்று பார்வையிடவுள்ளதாகவும், சடலம் அராலியிலேயே வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

குறித்த காசாளர் வைத்திருந்த சாவிக்கொத்து நேற்று முன்தினம் மானிப்பாய் மக்கள் வங்கிக்கருகில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதும், வங்கியின் கதவுகள் திறந்து கிடந்தபோதும், எந்தவித பொருட்களும் களவாடப்படாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (55, 111)

## இந்தியாவுக்குள் நுழையத்தடை

## சென்னை விமான நிலையத்தில் வைத்து ஈழவேந்தன் திருப்பி அனுப்பப்பட்டார்!

(சென்னை)

ஈழத்தமிழர் பேரவையின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகத் தமிழகம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் சென்னை விமான நிலையத்தில் வைத்து நேற்றிரவு திருப்பியனுப்பப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள், நேற்று மாலை 3.30 மணிக்கு சென்னை விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இவர் இந்தியத் தூதரகத்திடம் விசாப் பெறாமலேயே அங்கு செல்லமுடியும். அந்த வகையில் சென்னை விமான நிலையத்தை அடைந்த ம.க.ஈழவேந்தனை, அங்கிருந்து வெளியேறத் தமிழகப் பொலிஸ் அதிகாரிகள் இடமளிக்கவில்லை.



ஏற்கனவே இவருக்கு இந்தியாவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகக் கூறியே பொலிஸார் இவரை வெளியில் செல்ல அனுமதிக்கவில்லை.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனுடன் சென்றிருந்த மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், இந்திய அரச அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியபோதும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து நேற்றிரவு (12 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காம விபத்தில் 11 பேர் உயிரிழப்பு!

(கதிர்காமம்)

கதிர்காமம் திஸ்ஸமகாராகம பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் 11 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 8 பேர் காயமடைந்தனர்.

கதிர்காமம் திஸ்ஸமகாரகம பிரதான வீதியில் உள்ள கொகம்பகவஸ்தலத என்ற இடத்தில் தனியார் பஸ் ஒன்றும் வான் ஒன்றும் மோதியதால் இந்த அனர்த்தம் நிகழ்நதது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சிகளுடனும் நோர்வே அரசாங்கம் பேசும்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் உயிர்கொடுப்பதற்காக நோர்வே அரசாங்கத் தூதுக்குழு சிறிய அரசியற் கட்சிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

முதற்கட்டமாக நோர்வே தரப்பு ஹெல உறுமய மற்றும், ஜே.வி.பி. ஆகிய கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தவுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பு முப்படைத் தளபதிகளுக்கும் உத்தரவு!

(கொழும்பு)

கொழும்பு நகருக்கு விசேட பாதுகாப்பை வழங்குமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா - முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அரசியல் பிரமுகர்களைக் கொலை செய்தல் மற்றும் பொருளாதார கேந்திர நிலையங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளுதல் ஆகிய நோக்குடன் தற்கொலைக் குண்டுதாரிகள், கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நடமாடுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதால், கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் இந்திர டீ சில்வாவுடனும் இது தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்திய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, கொழும்பினுள்ளே நிலவும் செயல்முறைகள் பற்றியும் தீர்க்கமாகக் கலந்துரையாடினார். (தே)

## 9 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பாடசாலைகளில் நியமனம்!

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளில் 9 ஆயிரம் பேருக்கு பாடசாலைகளில் நியமனம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ், 7 ஆயிரம் பேரை பாடசாலை நூலகப் பணியாளர்களாகவும், 2 ஆயிரம் பேரை ஆசிரியர் சேவையிலும் இணைத்துக் கொள்ள கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் பட்டதாரிகளுக்கு பாடசாலைகளிலும், மேலதிகமாக ஆசிரியர் தலைமையங்கள் ஊடாகவும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சிங்களம், தமிழ், விஞ்ஞானம் மற்றும் அழகியற்துறைகள் சார்பாக ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவர்களில் பலர் சிங்கள மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்காகவும், சிங்கள (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...




அருணலு

## அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு
## ஆண்டு 5 மாணவர்களின்
## பெற்றோர்களுக்கு ஒரு நற்செய்தி!

2004 ஆண்டு ஆகஸ்ட் மாத புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடையும் அருணலு கணக்கு வைப்பாளர்களுக்கு பெறுமதியான பணப்பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

நீங்களும் தாமதிக்காமல், உங்கள் பிள்ளைகளுக்கு அருணலு கணக்கொன்றை அருகில் உள்ள கொமர்ஷல் வங்கிக்கிளைக்கு சென்று ஆரம்பியுங்கள். பரீட்சையின் போது கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியிருக்கும் சகல மாணவர்களும் இந்த பெறுமதியான பணப்பரிசில்களை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களுக்கும் அருணலு சார்பாக எமது நல்வாழ்த்துக்கள்.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

## திருவிழாவுக்குச் செல்ல படையினர் அனுமதி

(வசாவிளான்)

அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வசாவிளான் சென்.ஜேம்ஸ் ஆலய வருடாந்த திருவிழாவைக் கொண்டாடப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு திருநாள் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்க பங்குத்தந்தை அருட்திரு ஜோதிநாதன் அடிகளார் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இந்தத திருவிழாவில் பங்கு கொள்ள விரும்பும் யாத்திரிகர்கள் - இன்று காலை 7 மணிக்கு யாழ்.சென் சாள்ஸ் மகா வித்தியாலயம் முன்பாகவும், பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திலும் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கலந்துரையாடல்

நெடுந்தீவு மேற்கு - புதுக்குடியிருப்பு 30 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் குடும்பத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில், உதவி அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த 30 வீட்டுத்திட்டத்தில் தற்போது குடியிருப்பவர்கள் தொடர்பாகவும், வீட்டின் உரிமையாளர்கள் தொடர்பாகவும் ஆராய்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## சமகால அரசியற் கருத்தரங்கு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்படும் சமகால அரசியற் கருத்தரங்கின் 16 ஆவது தொடர் - நாளை திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதில் "திட்டமிட்ட தமிழர் கலாசாரப் பிறழ்வுகள்" எனும் தலைப்பில் அ.குமாரவேல் (விரிவுரையாளர், வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்லூரி) கருத்துரை வழங்குவார்.

இந்தக் கருத்தரங்கிற்கு ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## 5 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நினைவுப் பிரிசில்

(மானிப்பாய்)

வடக்கு - கிழக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிதியத்தினால் நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, மானிப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் - மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடத்திய கல்விக் கண்காட்சியில், ஐந்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கு - நவாலி வடக்கு ஹேமலதா ஞாபகார்த்த நிதியுதவித் திட்டத்தின்கீழ் பரிசில்கள் வழங்கப்பட்டன.

வலிகாமம் முன்பள்ளியின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மானிப்பாய் பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் - ஹேமலதா நிதியத்தின் சார்பில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (100)

# சொல்வதைச் செய்யமுடியாத அரசாங்கம் ஏன் இருக்கிறது?

## ஐ.தே.க பேச்சாளர் ரவீந்திர ரந்தெனிய கேள்வி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கூட்டி, உடனடியாக பெருபான்மையை நிரூபித்து சபாநாயகரைத் துரத்துவோம் என்று கூறிய ஆளும்கட்சி - சபாநாயகரைத் துரத்தாமலும், பெரும்பான்மையை நிரூபிக்காமலும் நாடாளுமன்றத்தை நாள் குறிப்பிடாது ஒத்திப் போட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் ரவீந்திர ரந்தெனிய தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, ஜே.வி.பி கருத்து வெளியிடுகின்ற வகையில இடைக்கால நிர்வாக ஆலோசனை தொடர்பான செய்திகளைப் பொதுமக்களும், எதிர்க்கட்சியும் தீர்மானிக்கவேண்டும் என்றால் அரசு எதற்காகச் செயற்படுகிறது?

இந்த ஜே.வி.பியின் இரட்டை வேட அரசியல் கொள்கை, கோட்பாடுகளின் வங்குரோத்துத் தனங்கள் பற்றி நாட்டு மக்களுக்கு விபரங்களை வழங்கவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது பற்றி அரசாங்கத்திடம் இன்னும் ஒரு நிலைப்பாடு இல்லை என்றும் அவர் மேலும் குற்றம் சுமத்தினார்.

# கஜேந்திரன் உரை தொடர்பாக விசாரணை நடத்தவேண்டும்!

## அரச தரப்பு, ஹெல உறுமய எம்.பிக்கள் முறையீடு

நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆற்றிய உரைபற்றி உத்தியோகபூர்வ விசாரணைகளை நடத்துமாறு சபாநாயகரிடம் அரசாங்கக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களும் எழுத்துமூலமான கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கஜேந்திரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசாங்கத் துருப்புக்கள் கொழும்புக்கு சவப்பெட்டிகளில் அனுப்பிவைக்கப்படுவர் என்று கூறியதாகவே, அரசாங்க உறுப்பினர்களும், ஹெல உறுமய உறுப்பினர்களும் சபாநாயகரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இதன்போது, சபாநாயகரிடம் சமர்ப்பித்த கடிதத்தில் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு சவால் விடுக்கக்கூடிய இவ்வாறான கூற்றுக்களை நாடாளுமன்றத்தில் தெரிவிக்க இடமளிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## நீர்பாசனத்துக்கென 647 கோடி அன்பளிப்பு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நீர்ப்பாசன நீர்வழங்கல் விவசாயத் திட்டத்துக்கு உலகவங்கி 647 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான உடன்படிக்கை நேற்று முன்தினம் நிதியமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.வி.ஜயசுந்தரவும், உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டும் இதில் கைச்சாத்திட்டனர்.

வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் மூலம் 15 ஆயிரம் குடும்பங்கள் நன்மைபெற இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# உத்தியோகபூர்வ வாகனத்தை மறைத்து வைத்துள்ள தளுவத்த!



முன்னாள் இராணுவத்தளபதியும், முன்னாள் கூட்டுப்படைத் தளபதியுமான ஜெனரல் றொகான் தளுவத்தை - ஓய்வுபெற்றுச் சென்று பல மாத காலமாகி விட்டபோதும், தமக்கு வழங்கப்பட்ட உத்தியோக பூர்வ காரை மறைத்து வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து லங்கா கிரிகா என்ற பத்திரிகை மேலும் செய்தி வெளியிடுகையில் -

றொகான் தளுவத்தைக்கு உத்தியோகபூர்வ கடமைகளுக்காக வழங்கப்பட்ட 79 இலட்சம் ரூபா பெறுமதியான பென்ஸ் காரே மறைத்து வைக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட 79 இலட்சம் பெறுமதியான இந்தக் காரின் இலக்கம் 19-8231 ஆகும். இராணுவப் பதிவு இலக்கம் யு.க 7276.

தற்போது, இந்த பென்ஸ் கார் 521/5, கடுவல றோட், கலாகேன கடுவல என்ற முகவரியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் இராணுவத்தளபதி றொகான் தளுவத்தவின் நெருங்கிய உறவினர் ஒருவரால் பாவிக்கப்படுகிறது.

இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அந்தக் காரின் மீற்றர் பெட்டியிலுள்ள பகுதி எலியினால் கடியுண்டதாகக்கூறி இராணுவச் செலவில் புதுப்பிக்கப்பட்டது.

இந்த முன்னாள இராணுவத் தளபதிக்கு இலட்சக்கணக்கில் செலவு செய்து மேலும் இதுபோன்ற வாகனம் ஒன்று வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## ஹெய்டி அமைதிப் பணிக்கு இலங்கை பொலிஸார்!

(கொழும்பு)

ஹெய்டியில் அமைதிக் காப்புப் பணியில் ஈடுபடுவதற்காக ஒருதொகுதி பொலிஸ் அணி இலங்கையிலிருந்து அனுப்பப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைதி காப்புத் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்தப் பொலிஸ் அணி ஹெய்டிக்குச் செல்லவுள்ளது.

இந்த விசேட பொலிஸ் குழு ஒரு வருடகாலம் ஹெய்டியில் அமைதி காப்புப் பணியில் ஈடுபடுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹெய்டிக்கு அனுப்பப்படவுள்ள விசேட பொலிஸ் குழுவில் கொன்ஸ்டபிள் முதல், பிரதிப் பொலிஸ் மா அதிபர்வரை பல்வேறு தரத்தைச் சார்ந்தோரும் இடம்பெறவுள்ளனர்.

இந்த அமைதிக் காப்புப்பணிக்குச் செல்லவுள்ள பொலிஸார் விண்ணப்பங்களை அனுப்பமுடியும் என்றும் -

இதுவரை சுமார் 500 விண்ணப்பங்கள் தமக்கு வந்திருப்பதாகவும் பொலிஸ தலைமையகம் தெரிவித்தது.

இதேவேளை, கடந்த காலத்தில் சில பொலிஸார் மட்டுமே சியரா லியோனில் அமைதிப் பணியில் ஏற்கனவே ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

## தனபால-ஹொவ்டே சந்திப்பு

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன்ட் புறூவ் ஹொவ்டே கடந்த வியாழக்கிழமை மாலை சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவை சந்தித்து - கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சு வார்த்தை குறித்து விளக்கிக் கூறினார்.

கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வனை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொவ்டே கடந்த வியாழக்கிழமை மாலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

கொழும்பு திரும்பிய அவர், சமாதான செயலகப் பணிப்பாளரை சந்தித்துத் தமிழ்ச்செல்வனோடு நடத்திய பேச்சுவார்த்தை குறித்து விபரித்ததாகத் தெரியவருகிறது.

# அரசியலமைப்புக்கு முரணாக காணிகள் பகிரப்படமாட்டாது

## பிரதியமைச்சர் நாடாளுமன்றில் உறுதி

அரசியலமைப்பிற்கு முரணான வகையில் எந்தவொரு காணியையும் பகிர்ந்து கொடுப்பதற்குத் தாம் இணங்கப் போவதில்லை என்று விவசாய, காணி, நீர்ப்பாசன பிரதியமைச்சர் விமல் ரத்நாயக்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க எழுப்பிய வாய்மூலக் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக யோசனையின்படி காணிகளைத் திருப்பிக்கொடுக்கவேண்டுமா? என்று, ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியிருந்தார்.

நாட்டிலுள்ள காணிகள் அரசாங்கத்துக்கும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கும், தனியாருக்கும் சொந்தமாக இருப்பதாகப் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த இடங்கள் தொடர்ந்தும் பங்கிடப்படாமல் இருப்பதாகவும் பிரதியமைச்சர் விமல் ரத்நாயக்கா மேலும் கூறினார்.

## 'மகாபொல' கொடுப்பனவு 2000 ரூபாவாக அதிகரிப்பு!

(கொழும்பு)

மாதாந்த மகாபொல கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

தற்போது 1650 ரூபா வழங்கப்படும் மகாபொல கொடுப்பனவு இனி 2 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படும்.

அத்துடன், உயர்கல்வி நிறுவனங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் 600 ரூபா கொடுப்பனவு - ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன், புலமைப் பரிசில் பெறத் தகுதியுடைய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான - பெற்றோரின் வருடாந்த வருமானமும் 12 ஆயிரம் ரூபாவிலிருந்து 20 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. என்றும், வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாணடோபுள்ளே தெரிவித்தார்.

## விவசாய உதவிகளுக்கு விண்ணப்பிக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்கு மறவன் புலோ பகுதியில் - அண்மையில் படையினரால் பயிர்ச்செய்கைக்கு அனுமதிவழங்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்குப் பயிர்ச் செய்கைக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்தவாரம் படையினரால் கையளிக்கப்பட்ட 175 ஏக்கர் காணி உரிமையாளர்களுக்கே உழுதல் உதவி மற்றும் விதைநெல், உரவகைகள் என்பன வழங்குவதற்கு கமநல நிலையத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால், பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னதாகக் கைதடி கமநல நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# இருபது ஈழத்தமிழ் அகதிகள் மன்னாரை வந்தடைந்தனர்!

(தமிழ்நாடு)

தமிழ் நாட்டிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியிருந்த 20 ஈழத்தமிழ் அகதிகள் நேற்றுமுன்தினம் தலைமன்னாரை வந்தடைந்தனர்.

தமிழ் நாட்டிலுள்ள கரூர் மாவட்டம், குழித்தலை அகதிமுகாம், மணடப அகதிமுகாம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோபால் சமுத்திரம் அகதிமுகாம் போன்றவற்றில் இருந்த அகதிகளில் 20 பேரே சிறிய மீன்பிடிப் படகுகளில் தலைமன்னாரை வந்தடைந்தவர்களாவர்.

இவ்வாறு வந்த இவர்களைத் தலைமன்னார் பொலிஸார் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிபதி என்.எம்.அப்துல்லா முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இந்த அகதிகளை அவர்களது சொந்த இடத்துக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதில் 12 பேர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வாநகர், ஜெயபுரம், லக்ஸபானா பகுதிகளையும், மிகுதி எட்டுப்பேரும் திருமலை மாவட்டம் உப்புவெளி, கும்புறுப்பிட்டி பகுதிகளையும் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினமே அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.(201)

## கிழக்கில் பாதுகாப்பு அதிகரிப்பு

கிழக்கு மாகாணத்தில் ஈ.பி.டி.பி செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கிழக்கு மாகாண் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜேசிங்க தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் வைத்து ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வேலாயுதம் ரவீந்திரன் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர், இந்தப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.



புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டொக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதி ஒன்று நேற்றுமுன்தினம் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனால் திறந்துவைக்கப்பட்டது.

புதிய கட்டடத் தொகுதியின் வரவேற்பு மண்டபத்தையும், நவீன வசதிகளுடன் கூடிய சத்திரசிகிச்சை கூடத்தையும் படங்களில் காணலாம்.

## வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக மாற்றக் கோரிக்கை

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை தனியான பல்கலைக்கழகமாக மாற்றவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிஷோர் சிவநாதன் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவைக் கேட்டுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த சந்திப்பிலேயே கிஷோர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த தினேஷ் குணவர்த்தன - அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும்வேளை, வவுனியா வளாகத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்களை அழைத்து வருமாறும், அவர்களுடன வளாகத்தைத் தனியாக அமைப்பது தொடர்பாக கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வரலாமென அமைச்சர் தெரிவித்ததாகவும் கிஷோர் தெரிவித்தார். (03)

# இந்திய - பாகிஸ்தான் அணிகள் இன்று பலப்பரீசையில் குதிப்பு!



(கொழும்பு)

ஆசியக் கிண்ணப் போட்டியில் அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

பகல் - இரவாக இந்தப் போட்டி நடைபெறும். பாகிஸ்தான் அணிக்கு இந்தப் போட்டி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் தோற்றால் அந்த அணி இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்துவிடும். இந்திய அணி கடந்த சில மாதங்களுக்கு முன்பு - பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி, ஒருநாள் தொடரை வென்றிருந்தது. இதனால் அதற்குப் பழிவாங்கும் வகையில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இன்று நடைபெறவுள்ள போட்டி- 92 ஆவது போட்டியாகும். இது வரை நடந்த 91 ஆட்டங்களில் - இந்தியா 33 போட்டிகளிலும் பாகிஸ்தான் 54 போட்டிகளிலும் வெற்றி பெற்றன. 4 ஆட்டங்கள் முடிவு இல்லாமல் ஆனது. இந்தியா 564 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 265 ஆட்டங்களில் வெற்றி பெற்றது. 273 போட்டியில் தோற்றது. 5 ஆட்டம் சமநிலையில் முடிந்தது. 23 போட்டிகளுக்கு முடிவு இல்லை

பாகிஸ்தான் 589 போட்டிகளில் விளையாடி 314 இல் வெற்றி பெற்றது. 257 ஆட்டங்களில் தோற்றது. 6 ஆட்டம் சமனாக முடிந்தது. 12 போட்டிகளுக்கு முடிவில்லை.




# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவின் அனுமதியுடன், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி - தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று -

ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழகம் மோதும் போட்டி - பிற்பகல் 3 மணிக்கும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மோதும் போட்டி - பிற்பகல் 4 மணிக்கும் இடம்பெறும். (13)

# முதல் இனிங்ஸில் இங்கிலாந்து; 568 ஓட்டங்களைக் குவித்தது!



(லண்டன்)

லோட்ஸ் மைதானத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியுடன் முதலாவது டெஸ்ட் போட்டியில் மோதும் இங்கிலாந்து அணி, இரண்டாவது நாள் ஆட்டத்தில் 568 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து முதல் இனிங்ஸ் ஆட்டத்தை முடித்துக் கொண்டது.



முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 391 ஓட்டங்கள் பெற்ற நிலையில் இருந்த இங்கிலாந்து அணி, நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.

இதில் முதல் நாள் ஆட்டத்தில் சதம் அடித்த றொபேட் கீ, இரண்டாவது நாளும் நிலைத்து நின்று ஆடி இரட்டைச் சதம் அடித்தார்.

இவர் 288 பந்துகளில் 31 பவுண்டரிகளுடன் 221 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் வோகன் 103 ஓட்டங்களைப் பெற்றார். இதற்குப் பின்னர் வந்த வீரர்கள் அனைவருமே மிகக் குறைந்தளவான ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.



இதனால், இரண்டாம் நாள் ஆட்டத்தில்- இங்கிலாந்து அணி 568 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் 45 ஓட்டங்கள் உதிரிகள் ஆகும். பந்துவீச்சில் - கொலின்ஸ் 4, பிராவோ 3, பாங்ஸ் 2, பெஸ்ட் 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி - இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கைல் 66 ஓட்டங்களையும், ஸ்மித் 45 ஓட்டங்களையும், லாரா 11 ஓட்டத்தையும் பெற்றனர்.

சந்தர்போல் 41 ஓட்டங்களுடனும், பிராவோ 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஜைல்ஸ் 3 விக்கெட்டுக்களையும், ஹொக்காட் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# மேற்கிந்திய வீரர் நாடு திரும்புகிறார்

இங்கிலாந்து அணிக்கு எதிராக டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் ரவி ராம்பால் - வலது காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக இங்கிலாந்திலிருந்து நாடு திரும்பியிருக்கிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடிவருகிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி, தற்போது லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் வேகப்பந்துவீச்சாளராக ரவி ராம்பால இடம்பெற்றிருந்தார். அவர் இது வரை டெஸ்ட் போட்டிகளில் ஆடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடருக்கு முன்னதாக நடைபெற்ற நட்வெஸ்ட் முத்தரப்பு ஒருநாள் தொடரின்போது, நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஒரு போட்டியில் ராம்பாலுக்கு வலது முழங்காலில் காயம் ஏற்பட்டது. இருப்பினும் டெஸ்ட் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அவர் தேறிவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அவருக்குச் சிகிச்சையளித்து வந்த மருத்துவர்கள் - அவர் முழுமையாகக் குணமடைய இன்னும் 4 வாரகாலம் ஆகும் என்று நேற்றுக்காலை அறிவித்துவிட்டனர். எனவே, அவர் நேற்று லண்டனிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளுக்குத் திரும்பினார் எனவும், மேற்கிந்தியத் தீவுகளில் அவர் தனது சிகிச்சையை மேற்கொள்வார் என்றும், மேற்கிந்தியத தீவுகளின் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

அவருக்குப் பதிலாக மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான கோரே கொலிமோர் அணியில் இடம்பெறுகிறார் என்றும், அவர் நாளை லண்டன் சென்றடைவார் என்றும் மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கூறியுள்ளனர்.




# பங்களாதேஷை 10 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது இலங்கை அணி!



இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில், கொழும்பு பிறேமதாஸ மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பகல் இரவுப் போட்டியில் - இலங்கை அணி 10 விக்கெட்டுக்களால் பங்களாதேஷைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணிக்கு ஆரம்பம் முதலே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துக் கொண்டிருந்தனர் - இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள்.

பங்களாதேஷ் அணியின் முதல் விக்கெட் - அந்த அணி 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் வீழ்த்தப்பட்டது. பின்னர் இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் சீரான முறையில் விக்கெட்டுக்களைக் கைப்பற்றி வந்தனர்.

இதனால் அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்த அணி சார்பாக ஆரம்ப வீரர் முகமட் அஸ்ரபுல் 66, மஞ்சுரல் இஸ்லாம் ரானா 43 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சமிந்தவாஸ் 3, முரளி, மலிங்க, மஃறூப் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



பதிலுக்கு 191 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், களமிறங்கிய இலங்கை அணியின் ஆரம்ப வீரர்கள் - சனத் ஜெயசூர்யவும் அவிஷ்க குணவர்த்தனவும், 33.3 ஓவர்களிலேயே ஆட்டத்தை முடித்து வைத்தனர்.

இதில் இலங்கை அணியின் ஜெயசூர்ய நீண்ட காலத்திற்குப் பின்னர் சதம் ஒன்றைப் பெற்றார். இவர் 101 பந்துகளில் 107 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 11 பவுண்டரிகளும் அடங்கும் (இது இவரது 17 ஆவது சதமாகும்.) அவிஷ்க குணவர்த்தன 100 பந்துகளில் 64 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டு அணியின் பந்து வீச்சாளர்களும் தலா 20 உதிரி ஓட்டங்களை, ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களல்ல என்ற வகையில் விட்டுக்கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது.




# ஒலிம்பிக் வீரர்களுக்குப் பாதுகாப்பு; கண்காணிப்பதற்கு ஆகாய கலம்!

கிறீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் அடுத்த மாதம் 13 ஆம் திகதி முதல் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவிருக்கிறது. இந்தப் போட்டிக்கு வரும் வீர வீராங்கனைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், போட்டிகளைச் சீர்குலைக்க முயலும் தீவிரவாதிகளின் சதித்திட்டத்தை முறியடிக்கவும், பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு கடமையில் ஈடுபடவுள்ள பொலிஸாருக்கு விசேட பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்புப் பணிகளுக்காக - கண்காணிப்புக் கலம் ஒன்றை பறக்கவிட்டிருக்கிறார்கள். சோதனை ரீதியில் பறக்கவிடப்பட்டுள்ள இந்த ஆகாயக் கலம் - நல்ல வெற்றியைத் தந்துள்ளது. இந்தக் கலம் மேலே பறந்து தனது பணியை துல்லியமாக மேற்கொண்டு, கண்காணிப்பு நடத்தி, பொலிஸாருக்குத் தகவல் அனுப்பும்.

இந்தநிலையில் ஒலிம்பிக் போட்டிக்கான வீர வீராங்கனைகள், அதிகாரிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் கிராமம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அந்தக் கிராமத்தில் 3 ஆயிரம் குடியிருப்புக்கள் உள்ளன.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# எமது போராட்டத்தை நசுக்குவதற்கு எதிரி இப்போதும் திட்டமிடுகின்றான்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



(புதுக்குடியிருப்பு)

எமது தேசத்தின் மீது மருத்துவத்தடைகளை விதித்து, மருத்துவமனைகளைக் குண்டுவீசித் தகர்த்தழித்தால், விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டுவிடும் என எண்ணியவர்களுக்கு, பலத்த ஏமாற்றத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தியதாக தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு டொக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைக் கட்டடத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகையிலேயே - தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் - எவராலும் வெல்லமுடியாத அளவுக்கு வலுப்பெற்றுள்ளது. பாரிய மருத்துவத் தடைகளையும், பொருளாதாரத் தடைகளையும் சந்தித்தன. எமது மக்களுக்கும், களமுனைப் போராளிகளுக்கும் எமது மருத்துவப் பிரிவினர் தமது மருத்துவப் பணிகளை ஆற்றியுள்ளார்கள்.

தமிழ்மக்களையும், அவர்களுடைய போராட்டத்தையும் நசுக்குவதற்கு எதிரி இப்பொழுதும் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றான்.

எங்களுடைய மண்ணிலே உள்ள மருத்துவர்கள் -குறிப்பிட்ட அளவு மருத்துவப் போராளிகளுடன் நின்று, பாரிய இராணுவத் தாக்குதல்களை எதிர்கொண்டு தமது மருத்துவப் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இதனால், எமது இனத்தின் எவ்வளவோ உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

# யாழ். மாநகரத்தில் 60 வீதிகளில் முதற்கட்டமாக வீதி விளக்குகள்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட 60 வீதிகளில், முதற்கட்டமாக 711 நவீன வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

நிக்கொட் அமைப்பின் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தச் செயற்திட்டத்துக்கு அமைய, தெரிவு செய்யப்பட்ட 60 வீதிகளில் - 16 இருபக்க சோடியம் விளக்குகளும், 243 ஒற்றைப் பக்கச் சோடிய விளக்குகளும், 452 ரியூப் லைற்றுக்களும் பொருத்தப்படவுள்ளன.

இதற்கான நிதியினை நிக்கொட் நிறுவனம் இலங்கை மின்சாரசபையின் யாழ். மாவட்ட பிராந்தியக் காரியாலயத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும், இந்த மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் வெகுவிரைவில் நிறைவு பெற்றுவிடும் எனவும் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (லெ)

# பாடசாலை மட்டத்திலான பரிசோதனை செயலமர்வு

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை பாடசாலை மட்ட மாதிரி பரிசோதனைச் செயலமர்வு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இடைநிலை வகுப்புக்குரிய மேம்படுத்தப்பட்ட புதிய பரிசோதனைகள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ள இந்தச் செயலமர்வில், 15 அயற் பாடசாலையைச் சேர்ந்த விஞ்ஞான ஆசிரியர்களும், கனகரத்தினம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கணித விஞ்ஞான ஆசிரி யர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய கல்வி நிறுவகத்தினராலும், ஜே.ஐ.சி.ஏ ஆய்வு அணியின் துணைக்குழு உறுப்பினர்களினாலும் நடாத்தப்படவுள்ளது.

இந்தச் செயலமர்வில் தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச மாதிரி பரிசோதனை மாநாட்டில் பிரேரிக்கப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்படவிருக்கின்றன.

முழுநாள் செயலமர்வாக நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வலய அதிகாரிகளும் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கசிப்பு வைத்திருந்தவருக்கு குற்றப்பணம் செலுத்த உத்தரவு

சட்டவிரோதமாக கசிப்பினை வைத்திருந்த நபர் ஒருவருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றம் 18 ஆயிரம் ரூபா குற்றப்பணத்தைச் செலுத்துமாறு உத்தரவிட்டது.

4500 மில்லி லீற்றர் கசிப்பினைத் தனது உடமையில் வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, கடந்த வியாழக்கிழமை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட - யாழ். 5 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவருக்கு மேற்படி தண்டனை வழங்கப்பட்டது.

இந்தக் குற்றப்பணத்தில் 15 ஆயிரம் ரூபாவைத் தண்டப்பணமாகவும், 3000 ரூபாவைத் தர்மப்பணமாக இருபாலை கானான் சிறுவர் இல்லத்திற்குச் செலுத்துமாறு நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

# பொதுமக்களின் ஒத்துழைப்பின்மையே அடிக்கடி மின்தடை ஏற்படக் காரணம்

## பொது முகாமையாளர் எஸ்.கமலநாதன் தெரிவிப்பு

மின்சாரத்தடை ஏற்படுவதற்கு பொது மக்களின் போதிய ஒத்துழைப்பின்மையே பிரதான காரணம் என, இலங்கை மின்சாரசபையின் வடபிராந்தியப் பொதுமுகாமையாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் அடிக்கடி திடீர் மின்தடை ஏற்படுவது குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.மாவட்டத்தின் பல இடங்களில் சட்டவிரோதமான முறையில் பலர் மின்பெற்று வருகின்றனர். அவவாறு அவர்கள் சட்டவிரோதமான முறையில் மின்பெறுவதால், மின்பாவனையாளர்கள் போதியளவு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

அத்தோடு, அவ்வாறு சட்டவிரோதமான மின்பாவனையாளர்களால், பல சந்தர்ப்பங்களில் மின்மாற்றிகள் செயற்படாது தடைப்பட நேரிடுகினறது.

மேலும் சட்டவிரோத மின பாவனையாளர்கள் - மின்பெறுவதற்குப் பொருத்தும் வயர்களால்கூட மின் தடை ஏற்படுகின்றது.

இத்தகைய சட்டவிரோதமாக மின் பெறுவோரை, சட்டத்தின் முன் நிறுத்தப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால், அவர்களுக்குத் தகுந்த அறிவுரை கூறி, அவர்களை அவ்வாறு செய்யாது தடுக்கவேண்டும்.

பல வீடுகளில் - மின்கம்பங்கள், மின்சாரக்கம்பிகள் போன்றவற்றுடன் நெருக்கமான முறையில் மரக்கிளைகள் காணப்படுகின்றன. அவற்றை வெட்டிவிடுவதுடன், எமது மின்சார சபை ஊழியர்கள் அவற்றை வெட்டுவதற்கும் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

பெறுமதிமிக்க மரங்கள் வெட்டப்படும்போது, சிறுதொகைப்பணம் மின்சாரசபையால் வழங்கப்படுவது வழக்கம்.

ஆனால், தற்போதைய நிதி நெருக்கடி நிலையில் அதனைப் பொதுமக்கள் எதிர்பார்க்கக்கூடாது.

அவ்வாறு மின்கம்பிகளுடன் நெருக்கமாக நிற்கும் மரங்களால் பல சந்தர்ப்பங்களில் மின்தடைகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக, மரம் முறியும் போதோ அல்லது கம்பியுடன் மரம் உராய்ஞ்சும்போதும் இத்தகைய மின் தடைகள் ஏற்படுகின்றன. இவற்றுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால், அடிக்கடி மின்தடை ஏற்படுவதைத்தடுக்க முடியும்.

எமது ஊழியர்கள் மின்சாரவிநியோகம் சம்பந்தமான கடமைகளை மேற்கொள்வதற்காக, சனிக்கிழமையும் மின்தடை ஏற்படுத்துவது வழக்கம்.

மற்றைய நாட்களில் பெரும்பாலும் பொதுமக்களின் பொறுப்பற்ற செயல்களாலேயே மின்தடை ஏற்படுகின்றன. இதில் சிலர் - வீடுகளில் அதிக மின்சாரப்பாவனையை மேற்கொள்வதும் அடங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# ஊர்காவற்துறை ப.நோ.கூ. சங்கத்தால் மாணவர் மத்தியில் போட்டி நிகழ்வு

ஊர்காவற்துறைப் ப.நோ.கூ. சங்கம 82 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மாணவர்கள் மத்தியில் போட்டிகளை நடத்தவுள்ளது.

மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை, வினாடிவினா, குழுப்பாடற் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஒழுங்கமைப்புகளை ஊர்காவற்துறைப் ப.நோ.கூ. சங்கத்தினர் மேற்கொண்டுள்ளார்கள்.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஊர்காவற்துறை புனித மரியாள் பாடசாலை மைதானத்தில், 82 ஆவது ஆண்டு நிறைவுநாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு ஊர்காவற்துறை ப.நோ.கூ. சங்கத் தலைவர் த.சுந்தரலிங்கம் தலைமை தாங்கவுள்ளார்.

இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், சங்க அங்கத்தவர்கள், பணியாளர்களுக்குமான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட துணை அரசியற் பொறுபபாளர் செம்மணன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கி.விஜிதரன், ஊர்காவற்துறை பிரதேச் உதவி அரசாங்க அதிபர் எக்ஸ்.செல்வநாயகம் போன்றோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### சட்டவிரோத மின்சாரம் ஐவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஐவருக்கு, யாழ்.மாவட்ட நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்த உத்தரவிட்டது.

ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர்களுக்கு எதிராக இலங்கை மின்சாரசபையினர் யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மேற்படி நபர்கள் குற்றத்தினை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து, தலா 5000 ரூபா வீதம் குற்றப் பணமாகச் செலுத்துமாறு யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

### உள்ளூராட்சி வாரத்தையொட்டி நெடுந்தீவில் வேலைத்திட்டம்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச சபையினால் பல செயற்பாடுகளும், வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அண்மையில் நெடுந்தீவில் உள்ள சனசமூக நிலையங்களில் நிர்வாகத்தினரை அழைத்துக் கருத்தரங்கொன்றை நடாத்தியதுடன், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பாடநூல்கள், கற்றல் உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டது.

இதேவேளை, வார விழாவையொட்டி நெடுந்தீவு பிரதேசசபைக் கட்டிடங்கள், சுற்றுமதில் என்பன வர்ணம் பூசப்பட்டுப் புதுப்பொலிவுடன் காணப்படுவதோடு, வளாகப் பகுதியில் மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# அறநெறிப் பாடசாலை மாணவருக்கு இந்து சமய இறுதிப் பரீட்சை!

(யாழ்ப்பாணம்)

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இந்துசமய இறுதிப் பரீட்சை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நாடுபூராகவும் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகளின் தொகைக்கேற்ப நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமெனவும்,

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலமாக - பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்த, பத்தரமுல்லை. என்ற முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கும்படி பரீட்சை ஆணையாளர் கேட்டுள்ளார். (100)

# தேசிய எழுச்சிப் பேரவையில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவையின் மானிப்பாய் பிரதேச மாதாந்த வீர முரசு கலையரங்க நிகழ்வு, கடந்த வியாழக்கிழமை மானிப்பாய செல்லமுத்து கலை அரங்கில் நடைபெற்றது.

மானிப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுடரினை லெப் கேணல் நியூட்டன், லெப். முத்து ஆகிய மாவீரர்களது தாயார் தம்பிராசா பரிமளம் ஏற்றினார்.

நிகழ்வின் சிறப்புரையினை தேசிய எழுச்சிப் பேரவை ஊடாகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் ஆற்றினார்.

இந்த நிகழ்வில், மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வேப்பிலை நடனமும், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களின் "தடைகளைத் தாண்டி" நாடகமும் இடம்பெற்றது.

மானிப்பாய் பிரதேசத்தின் நூற்றுக் கணக்கான மக்கள் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

### திங்களன்றே நடைபெறும் சமூகக்கல்வி பரீட்சைகள்

யாழ்.கல்வி வலயத்தில் இன்று நடைபெறவிருந்த சமூகக் கல்வி பொது அறிவுப் போட்டி - தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தச் சமூகக்கல்வி பொது அறிவுப்போட்டி, நாளை திங்கட்கிழமை பி.ப. 1 மணிக்கு, முன்பு அறிவிக்கப்பட்ட மூன்று கோட்டங்களிலும் போட்டிப் பரீட்சைகள் நடைபெறும்.

இந்தப் போட்டிப் பரீட்சைகளைத் திருத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் - செவ்வாய்க் கிழமை பரீட்சை விடைததாள்களைத் திருத்துவதற்கு உரிய கோட்டங்களுக்குச் செல்லுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : யோ.செறோன்
முகவரி : இரணைப்பாலை புதுக்குடியிருப்பு

நான்காவது அகவையில்



பெயர் : க.ஈழநிலா
முகவரி : பொற்பதி வீதி, கொக்குவில்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# விளையாட்டு அரங்கம்



## உன்னையே நீ உணர்வாய்


அத்தபத்து
"நல்ல சாத்தலப்பா"

அவுஸ்ரேலிய அணியை வெல்லக்கூடிய அணியாக இந்திய அணி வளர்ந்து விட்டது என மார்தட்டிக்கொண்ட இந்திய அணித்தலைவர் செளரவ் கங்கூலிக்கு நல்லதொரு பாடம் புகட்டிவிட்டார் இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தபத்து.

வாய்ச்சொல்லின் வீரரான கங்கூலி வாய்க்கு வந்தபடி பேட்டிகளை வழங்குவதில் பலே கெட்டிக்காரர். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியுடனான போட்டியின் பின் கருத்துத் தெரிவித்த கங்கூலி எமிரேட்ஸ் அணியுடனான போட்டியின் போது ஆரம்பத்தில் காணப்பட்ட தடுமாற்றம் இலங்கை அணியுடன் இருக்காது எனத் தெரிவித்தார். கடைசியில் இலங்கை அணியிடம் வாங்கிக்கட்டிக்கொண்டார்.

ஆனாலும், அவர் தனது பாணியை விட்டுவிடவில்லை. இந்திய அணியின் தோல்விக்கு சச்சின் டெண்டுல்கரின் மோசமான துடுப்பாட்டமே காரணம் எனத் தெரிவித்திருக்கிரார்.

இலங்கை அணியுடனான போட்டியில் 16 பந்துகளுக்கு மட்டுமே முகம் கொடுத்த கங்கூலி பெற்றுக்கொண்டது வெறும் ஆறே ஆறு ஓட்டங்கள் தான். டெண்டுல்கார் 13 பந்துகளுக்கு முகம் கொடுத்து 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஆனால், தான் ஏதோ சதம் அடித்து அணியை வழிநடத்தியவர் போன்று சச்சின் மீது குற்றத்தைச் சுமத்துகின்றார். தம்புள்ள மைதானத்தைப் பொறுத்தவரையில் 282 ஓட்டங்கள் என்பது, இரண்டாவதாக துடுப்பெடுத்தாடும் அணியைப் பொறுத்தவரையில் கடினமான இலக்கே. இதை உணராத பொறுப்பற்ற விதத்தில் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழந்த கங்கூலியின் கருத்து நகைப்பிற்கிடமானதே.

இந்திய அணியின் தோல்விக்குப் பின்னால் பல காரணங்கள் உள்ளன. ஆனால், அதற்காக கங்கூலியின், சச்சின் மீதான கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. சச்சின் என்ற ஒரு தனிநபர் துடுப்பாட்டத்தில் சோபிக்காததால் இந்திய அணி சோடை போனதென்றால் ஏனைய வீரர்கள் என்ன செய்தார்கள்? இறுதிவரை போராடும் மனப்பாங்கில் இந்திய அணியை வழிநடத்திய ராவிட் பாராட்டுக்குரியவர். அனுபவம் குறைந்த பார்த்தீவ்பட்டேலை விடுத்து நெஹ்ராவை இணைத்திருந்தால் பந்துவீச்சு, துடுப்பாட்டம் ஆகிய இரண்டிற்கும் நெஹ்ரா பலம் கொடுத்திருப்பார். நெஹ்ராவை விலக்கியமை ஆட்டத் தேர்வாளரின் தவறே.

அடுத்து, ஷேவாக்கும் சச்சினும் இணைந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக நல்லதொரு அடித்தளத்தை ஏற்படுத்தி வருகின்ற போதும், பார்த்தீவை ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக சச்சினுடன் அனுப்பியமையும் குறைபாடான செயலாகும். ஏனெனில், சச்சினுக்கும் சேவாக்கிற்கும் இடையே நல்லதொரு மைதானப்புரிந்துணர்வு இருப்பது யாவரும் அறிந்ததே.

இந்திய அணியின் தோல்விக்கு இலங்கை அணியினர் ஒட்டுமொத்தத்தில் சகலதுறைகளிலும் பிரகாசித்தமையும் காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட்டே ஆகவேண்டும் உலகிலே சிறந்த வீரர் சச்சின் டெண்டுல்கர், ஆனால், தற்பொழுது அவர் இந்திய அணி நெருக்கடிக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் கைகொடுப்பதில்லை. நஸார் ஹுசேன் தலைமைதாங்கிய இங்கிலாந்துடனான "நட்வெஸ்ட்" இறுதிப்போட்டியிலும் சரி, உலகக்கிண்ண இறுதிப்போட்டி, இலங்கை அணியுடனான இந்தப்போட்டி ஆகியவற்றிலும் சச்சின் காலைவாரிவிட்டார்.

என்னதான் இருப்பினும் உலகக் கிண்ணப் போட்டிகளின் போது இந்திய அணியிடம் தான்பெற்ற களங்கத்தைத் துடைத்துக்கொண்டது இலங்கை அணி.

-லெஸ்லி


ஹர்பஜன், முரளி
"பந்தாடும் கைகள்"

## மூவரில் முதல்வன் யார்?


சங்ககார
"சங்காரம் செய்வான்"

ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வரும் இந்த வேளையில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் அணிகளின் பலம், பலவீனம் பற்றி சற்று ஆராய்வோமா!

இலங்கை அணியைப் பொறுத்தவரையில் பந்து வீச்சில் முரளிதரனை மட்டும் நம்பியிருக்க முடியாது. முரளிதரனுடைய சிறந்த பந்துவீச்சு, சார்ஜாவில் இந்தியாவிற்கு எதிராக 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 30 ஓட்டங்க ளுக்கு 7 விக்கட்டுக்களைக் கைப்பற்றி இருந்தது. என்றாலும், பொதுவாக அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கெதிராக அவரது பந்து வீச்சு எடுபடுவதைப் போன்று, ஆசிய நாட்டு வீரர்களிடம் அவ்வளவாக எடுபடுவதில்லை என்பதிலும் உண்மை இல்லாமல் இல்லை.

முரளியால் 4,5 விக்கெட் என எடுக்கமுடியாவிட்டாலும் ஆட்டத்தின் திருப்புமுனையை ஏற்படுத்துவதில் அவரின் பங்கு மிகமுக்கியமாகும். அவரால் கைப்பற்றப்படாத விக்கெட்டுக்களை ஏனைய பந்து வீச்சாளர்கள் கைப்பற்ற, போட்டி போட்டாலே மற்றைய அணிகளை அவர்களால் வாட்டி எடுக்க முடியும்.

அவுஸ்ரேலியாவுடனான தொடரை இழந்து நிற்கும் இலங்கை அணி, சற்று உற்சாகம் குன்றிக்காணப்பட்டாலும், சொந்த நாட்டில் போட்டி நடைபெறுவதால் அங்கே விட்ட தவறுகளை எல்லாம் பட்ட அனுபவமாகக் கொண்டு, இங்கே சுட்ட பொன்போல் ஜொலிப்பார்கள் என்பது தெட்டத் தெளிவான முடிவு.


டிராவிட்
"மெல்லெனப் பாயும் தண்ணீர்"

இந்திய அணியைப் பொறுத்தவரையில் வழமை போல் ஏழு துடுப்பாட்ட வீரர்களுடன் களம் இறங்குவதும், முன்வரிசை வீரர்கள் விரைவில் ஆட்டமிழக்க, வெறுப்புடன் இருக்கும் ரசிகர்களை, தனது பொறுப்புடன் கூடிய ஆட்டத்தால் வெற்றியின் இருப்பிடம் நோக்கி அழைத்துச்செல்வது அண்மைக் காலமாக ராவிட்தான் என்றால், அதை மறுப்புடன் ஏற்க வேண்டியதே இல்லை. அந்த நிலை இங்கும் தொடரவாய்ப்புண்டு.

பந்து வீச்சைப் பொறுத்து ஷகீர்கான் அணிக்குத் திரும்பி இருப்பது பலமென்றாலும், தொடக்கப் பந்துவீச்சாளராக இருந்த அவர் இப்போது மூன்றாம் நிலை வீரராகப் பந்து வீசுவது அவரது பலவீனத்தையே எடுத்துக்காட்டுகிறது. இதனால் பதானுக்கும், பாலாஜிக்குமே நெருக்கடி அதிகரிக்கும். ஷகீர்கானுக்கு பதிலாக, ஆசிஸ் நெஹ்ரா பாகிஸ்தான் தொடரில் சிறப்பாகப் பந்து வீசியது குறிப்பிடத்தக்கது.


யூனுஸ் கான்
"சதங்களோ சத்தியமானவை"

இளமை நிறைந்த பாகிஸ்தான் அணியைப் பொறுத்து துடுப்பாட்டவரிசை பலமாகத்தான் இருக்கிறது. பந்து வீச்சாளர்கள் வேகத்தை விட, விவேகத்துடன் பந்து வீசினால் ஆசிய கிண்ணத்தின் நடப்புச் சம்பியன் பட்டத்தை அவர்களால் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள முடியும். இதற்குப் புதிய பயிற்றுனர் பொப் வூல்மரின் பயிற்சியும் கைகொடுக்கும்.

இறுதியாக பெரும்பாலான போட்டிகள் பகல், இரவு ஆட்டமாக காணப்படுகின்றமையால் வீரர்களின் பங்களிப்பைவிட நாணயச்சுழற்சியின் பங்களிப்பே வெற்றியைத் தீர்மானிக்கும் காரணிகளில் மிக முக்கியமானதொன்றாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

-விமலன்.

## "ஊக்கமது" கைவிடுக

ஐக்கிய அமெரிக்காவின் பிரபல வீரவீராங்கனைகளுக்கான பயிற்றுனர்கள் ஜோர்ச் வில்லியம்ஸ், மற்றும் சூ ஹம்ப்ரி அம்மையார் - ஏதென்ஸ் 2004 ஒலிம்பிக் போட்டிகளில் நாங்களே கூடுதலான பதக்கங்களை அள்ளப்போகிறோம் என்கிறார்கள். அத்தோடு ஊக்கமருந்துப் பாவனை தொடர்பில் சர்ச்சைகள் ஏதும் இல்லாத அமெரிக்கக் குழுவொன்றையே கொண்டு செல்லப் போகிறோம் என்றும் உறுதிப்படுத்துகிறார்கள்.

சந்தேகம்இல்லாமல், பதக்கப் பட்டியலில் முன்னிலை வகிக்கப்போவது ஐக்கிய அமெரிக்காதான். ஆனால் இரண்டாவது விடயம் எத்தனை உறுதிப்படுத்தத்தக்கது என்பதுதான் கேள்விக்குரியது. இப்பொழுதே ஐக்கிய அமெரிக்காவின் பிரதானமான ஆறு தடகள வீரவீராங்கனைகள் மீது, ஊக்கமருந்துத் தொடர்பிலான விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவர்கள் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்படல் வேண்டும். ஆனால் ஏதோ ஒரு வகையில் பதக்கங்கள் வென்ற பின் குற்றச்சாட்டுக்கு உள்ளாகுபவர்கள் பற்றி என்ன செய்வது.

ஆண்கள் பயிற்றுனர் வில்லியம்ஸ் கருத்துக் கூறும்போது - சிட்னியில் தடகளப் போட்டிகளில் மட்டும் பத்துத் தங்கம் உட்பட இருபது பதக்கங்கள் வென்றோம் என்பவர் இம்முறை அதனைவிடக் கூடுதலான பதக்கங்கள் வெல்வோம் என்கிறார் தன்னம்பிக்கையுடன்.

தற்போது குற்றச்சாட்டுக்கள் என்ற மேகமூட்டம் காணப்படுகிறது உண்மைதான். ஆனால், அவையெல்லாம் விலகும் என்ற நம்பிக்கை உண்டு என்கிறார்கள் பயிற்றுனர்கள். தடகள ரசிகர்கள் உறுதியாகச் சொல்லக்கூடிய ஒரு விடயம் மட்டும் உண்டு. பதக்கப்பட்டியலில் முதலிடம் பெறப்போவது ஐக்கிய அமெரிக்கா என்பதே அது.

-மரியா

## தங்கம் வெல்லும் பந்துகள்

யூரோ 2004 உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் கிண்ணம் வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட இங்கிலாந்து, கால் இறுதிப்போட்டியுடன் வெளியேறியமை பெரிய அதிர்ச்சியாகக் கருதப்பட்டது. அதிலும், அணித்தலைவர் டேவிட் பெக்கம் போர்த்துக்கல் அணிக்கு எதிரான போட்டியில் **Tie Breaker** சந்தர்ப்பத்தில் கோல் கம்பங்களுக்கு மேலால் அடித்துச் சந்தர்ப்பத்தைக் கோட்டைவிட்டார். எல்லோருக்கும் அதிர்ச்சி. பெக்கத்திக்கோ தலையில் இடிவிழுந்த நிலை, அவர் அடித்த பந்து கோல்கம்பத்திற்கு மேலால் திசைமாறிப்போய் விளையாட்டை ரசித்துக்கொண்டிருந்த ரசிகர்கள் மத்தியில் விழ, அதனை ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த ஒரு ரசிகர் அலாக்காகப்பிடித்து தன்வசப்படுத்திக்கொண்டார். அந்தப்பந்தைத் தான் ஒரு நினைவுச்சின்னமாக தன் நாட்டுக்குக் கொண்டு போகப்போவதாகவும் கூறியிருந்தார்.


டேவிட் பெக்கம்
"மன்னனுக்குப் போதாத காலம்"

இப்பொழுது வரும் செய்திகளைப்பார்த்தால் அந்த அனுமதி அவருக்குக் கிடைத்து, பந்து அவரது வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டது தெரிகிறது. பெக்கம் அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் - தரை சேறாக இருந்தமை அந்தத் தவறுக்குக் காரணம் என்று கூறியிருந்தார். அதுபோக பந்தைப் பிடித்த ஸ்பானியர் அதனை ஏலம்விடத்தயார் என்று **Inter Net** ல் அறிவித்திருந்தார். இதனைத்தொடர்ந்து பிரித்தானியத் தினசரி ஒன்று விலையைக் கூறியுள்ளது. எங்களைப் பொறுத்தவரை மலிவான விலைதான் அதாவது 12, 000 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ், இலங்கை ரூபாவில் ஏறத்தாழ 18 இலட்சம் ரூபா. உதைபந்தாட்டத்தில் **Silver Goal, Golden Goal** என்பன அணிபெறும் வெற்றியைக் குறிக்கும் இப்பொழுது இந்த **Golden Ball** ரசிகரை லட்சாதிபதியாக்கப்போகிறது.

-ஜெயா

# அமைதியாய் அசத்தியவன்




இங்கிலாந்தில் ஒரு கிரிக்கெட் திருவிழா நடைபெற்று முடிந்திருக்கிறது. இங்கிலாந்து, நியூஸிலாந்து, மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் இந்தக் கிரிக்கெட் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தன.

போட்டிகளை நடத்திய நாடு என்பதைக்காட்டிலும் அண்மையில் தொடர்வெற்றிகளைப் பெற்றிருந்த இங்கிலாந்து அணி இறுதிப் போட்டியில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளது.

போட்டித் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர், இங்கிலாந்து அணியின் தலைவர் கருத்துக் கூறும் போது-தம்முடைய அணி தோல்விகளைச் சந்திப்பது அல்லது தமது அணியை வெற்றியீட்டுவது எளிதான காரியம் இல்லை என்ற கருத்தில் பேட்டியளித்திருந்தார்.

வெள்ளையின வீரர்களைக் கொண்ட ஒரு அணியின் இவ்வாறான வாய் வார்த்தைகளும், அந்த வாய் வார்த்தைகளுக்கு ஏற்றாற் போல அடிவாங்குவதும் வழக்கமானது என்பதை இந்த முக்கோணத் தொடர் உணர்த்தி இருக்கின்றது.

இதில் குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒரு விடயம் என்னவென்றால், மேற்கிந்திய அணி நீண்ட இடைவெளிக்குப் பின்னர், இறுதிப் போட்டியொன்றில் விளையாடியமை தான்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பிறைன் லாறா இங்கிலாந்து அணியுடனான போட்டியில் வென்றதன் பின்னர் கருத்தொன்றை தெரிவித்திருந்தார்.

தனது சொந்த நாட்டில் இழந்த வெற்றியை இங்கிலாந்து மண்ணில் பெறுவதே தனது இலட்சியம் என்ற வகையில் அவரது கருத்து அமைந் திருந்தது.


லாறா
"கொம்ரேட் லாறா"

இந்தக் கருத்தினை அறிந்ததும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ரசிகர்கள் "லாறா" சொன்னதைச் செய்யக் கூடியவர். சொல்லிவிட்டுத் தான் 400 ஓட்டங்களைப் பெற்றுச் சாதனையை ஏற்படுத்தியவர். செய்து காட்டியவர். நியூஸிலாந்து அணியையும் இறுதிப் போட்டியில் சந்தித்து வெற்றியைப் பெற்று கோப்பையை வென்றுவிடுவார் என்று எண்ணினார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

நியூசிலாந்து அணி அமைதியாக, நிதானமாக விளையாடினார்கள். அறிக்கை விடுதல், ஆர்ப்பாட்டம் செய்தல் என்பவற்றை அவர்கள் நிகழ்த்தியதாகத் தெரியவில்லை.

ஆனால் "ஸ்ரீபன் பிளமிங்" இன் சரியான வழிநடத்துதலால் இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வென்று -நியூசிலாந்து வீரர்கள் இலகுவாக கோப்பையைக் கைப்பற்றினார்கள்.

~ வெண்மதி ~

# நான் உயர உயரப் போகிறேன்


அன்ரே அகாஸி
"800 வெற்றிகளா அப்பப்பா"

கட்டொழுங்கு, பொறுப்புணர்ச்சி, முயற்சி அதோடு அர்ப்பணிப்பு இன்னும் பொறுப்பேற்கும் துணிவு, இவ்வளவும் இருந்தால் கனவுகள் நனவாகும், நினைவுகள் ஈடேறும் என்பவர் அமெரிக்காவின் நிக்பொலெட்டேரி. இவரைப் பற்றிக் குறிப்பிடக் காரணமுண்டு. மரியா ஷரபோவா, அன்ரே அகாஸி, ஜிம்குயெர், மொனிக்கா செலஸ், மார்டீனா ஹிங்கிஸ் ஆகியோர் இவரது சிஷ்யப் பிள்ளைகளுக்கான ஒரு சில உதாரணங்கள் . ஷரபோவாவின் விளையாட்டை மொஸ்கோவில் பார்த்த மார்டீனா நவ்ரடிலோவா அம்மையார் இவரை பொலெட்டேரிக்கு அறிமுகம் செய்ய, அந்தச்சிறுமியின் அபாரத் திறமை கண்ட அவர் புலமைப் பரிசில் கொடுத்து, தன்னுடன் சேர்த்துக் கொண்டார். அவர் இன்று விம்பிள்டன் சம்பியன் என்றும் இன்னொரு கதை.


ஷரபோவா
"இளமை இதோ! இதோ!"

பொலெட்டேரி 1978ஆம் ஆண்டில் 30 ஏக்கர் நிலத்தில் தன் விளையாட்டுத் தளத்தை அமைத்தார். இன்று அதன் விஸ்தீரனம் 200 ஏக்கர். அங்கு நடைபெறும் பயிற்சிகள் கொல்ப், பேஸ் போல், கூடைப்பந்து, உதை பந்தாட்டம், மற்றும் மாபெரும் ஜிம்னேசியம் . முழுநேர மாணவர்கள் ஒருவருடத்திற்கு இலங்கை ரூபாவில் 35 இலட்சம் ரூபா அதிகபட்சமாகவும் அதனை விடக் குறைந்த செலவிலும் படிக்கலாம். அறிமுறை, செய்முறை இரண்டும் மிகக்கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. என்கிறார், தினமும் 18 மணித்தியாலம் வேலைசெய்யும் 72 வயதான இவர். இவரின் கண்ணோட்டத்தின் படி சரபோவாவிற்கு அடுத்ததாக 14 வயது நிரம்பிய சிறுமி சிசில் கரடன் சேவாவை குறித்துக் கொள்ளுங்கள் என்கிறார். சர்வதேச விளையாட்டுகளைப் பார்ப்பதோடு நிறுத்திக் கொண்டால் போதும் போலத் தெரிகிறது. உள்ளார்ந்து அறியும் போது எட்ட முடியாத உயரத்தை அண்ணாந்து பார்த்து ஏங்குவதைத்தவிர்க்க முடியாதிருக்கிறதே.


நிக் பொலெட்டேரி
"நீ குரியன் தான்"

-ஜோசப் கிருஷ்ணா.

# அமெரிக்க டொல்பின்கள்

## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

*01. நட்வெஸ்ட் ஒரு நாள் கிண்ணத்தைக் கைப்பற்றிய நாடு எது?*
*02. முரளிதரனின் சாதனையை சமப்படுத்திய அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர் யார்?*
*03. 2004 விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் சம்பியன் யார்?*

**விளையாட்டுப் புதிர் 17**

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:............................................................

முகவரி:..................................................................

01.

02.

03.

*விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 29.07.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.*

விலாசம்: விளையாட்டுப் புதிர்-இல.17
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அனுசரணை:
ஜொனெக்ஸ் மலீரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
**YONEX MULTI PALACE**
*76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

1972ல் மியூனிக் ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சல் போட்டிகள் தொடர்பில், ஒரு சாதனை நிகழ்த்தப்பட்டது. அந்த ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த மார்க் ஸ்பிட்ஸ் ஏழு தங்கப் பதக்கங்களை வென்றார். வரலாறு மீண்டும் திரும்பும் போல, தன்னம்பிக்கை கொள்கிறார்கள் அமெரிக்கர்கள். இந்த முறையும் நீச்சல் வகைகளில் ஏழு அல்லது அதற்கு மேல் வெல்லக் கூடிய ஒருவர் 44 பேர் கொண்ட அமெரிக்க நீச்சல் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது சிறப்பு இவர் பத்தொன்பது வயது மட்டுமே ஆனவர் என்பது இவரது பெயர் மைக்கல் பெல்ப்ஸ் இதே வேளை, முப்பத்தொரு வயதான முன்னைய மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் ஏழு தங்கம் உட்பட ஒன்பது பதக்கங்கள் வென்ற ஜெனி தொம்ப்ஸன் வீர வீரங்கனைகள் மத்தியில் அதிகூடிய வயதைக் கொண்டவராக இருக்கிறார். தெரிவு செய்யப்பட்டுள்ள அமெரிக்க அணியின் ஏழு அங்கத்தவர்கள் உலக சாதனைப் பட்டத்தைத் தம்மகத்தே கொண்டிருப்பவர்கள்.


மைக்கல் பெல்ப்ஸ்
"பாயும் மீன்"

பொதுவாக, அமெரிக்க நீச்சல் வீரர்களே 2004 எதென்ஸ் ஒலிம்பிக்கில் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்பது உறுதியாகிவிட்டதொன்று. இதில் ஆண்கள் தமக்குரிய பதின்மூன்று நிகழ்வுகளில் ஒன்பது தங்கம் வெல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒன்பதிலுமே சாதனை நேரம், வீரர், அனைவரும் அமெரிக்கர்களே ஏனைய நான்கிலும் வெள்ளி அல்லது வெண்கலம் நிச்சயம் என்றும் கூறுகிறார்கள். அதோடு நீச்சல் அஞ்சலிலும் தங்கம் நிச்சயம் என்கிறார்கள். மகளிர் பொறுத்த ஆடவர் அளவில் இல்லாவிட்டாலும் நான்கு தங்கப்பதக்கங்கள், தனி நிகழ்வுகளில் உறுதியாக இருக்கிறது. நீச்சல் அஞ்சலில் கடும் போட்டி இருந்தாலும் அமெரிக்கர்கள் நம்பிக்கையுடனனேயே இருக்கிறார்கள்.

இதேவேளை, அமெரிக் காவுக்குப் பொதுவாகப் போட்டியாகத் திகழப்போகிறவர்கள் பிரித்தானியா, அவுஸ்ரேலியா, நெதர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளாகத்தான் இருக்கும். அதோடு அமெரிக்காவின் இன்னொரு விசேடம் நட்டாலியா கோலின் அம்மையார் - அமெரிக்க நீச்சல் குழுவின் பயிற்றுனர். அதே வேளை, நீச்சற்போட்டி வரலாற்றில் ஒரு பெண்மணி இந்தப் பதவி வகிப்பது இதுவே முதன் முறையாகும். என்ன இருந்தாலும் அமெரிக்கா இம்முறை நீச்சல் போட்டிகளில் ஏனைய நாடுகளுக்கு தண்ணி காட்டத்தான் போகிறது.

~ நிர்மலன் ~

கறுப்பு ஆடி...

# கறுப்பு ஆடியைத் தந்தவர்களுக்கு ஆடிமாதம் கொடுத்த பதிலடிகள்

- கனகரவி

ஒரு காலத்தில் ஆடி மாதமென்றால் தமிழருக்கு ஆனந்தமான மாதம். இன்று கறுப்பு ஆடி... மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. அதனை வெல்லவும் ஆடி மாதத்தையே தமிழர் கையில் எடுத்தனர்.

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தமே..."

என்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் வரிகள் நெஞ்சை நெகிழவைப்பதாகும். ஆடிப்பிறப்பை ஆனந்தமாக கொண்டாடிய தமிழர் பணம் வெல்லத்துடன் இனிப்பான கூழும், கொழுக்கட்டையும் அயலவருக்கும் கொடுத்து அன்புடனே தாமும் உண்டு மகிழ்ந்ததும், ஆடி அமாவாசையன்று தந்தையரை நினைத்து விரதமிருப்பதும், ஆடிக் காற்றின் ஆனந்தத்தை விடுமுறையாக கூடி அனுபவித்ததும், ஆடிபட்டம் என்ற பெருவிளைச்சலுக்கான விதைப்பும், ஆடி உழவை தேடி உழு என்று பெரும் ஆனந்தமான நிகழ்வுகள் பல சேர்ந்திருந்த இந்த மாதத்தில் தமிழரை அடக்க நினைத்தவருக்கு பதிலடி கொடுப்பதாக ஆடி மாதத்தை தேர்ந்தெடுத்தனர். அது தான் சிங்கள தேசத்தின் படையின் ஆக்கிரமிப்புச் செயலுக்கு கொடுக்கப்பட்ட பேரடி... இதில் பதின்மூன்று படையினர் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் யாழ்.திருநெல்வேலியில் கொல்லப்பட்டனர். இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பார்த்த சிங்கள பேரினவாதிகள் தமிழின அழிப்பை மேலும் வீச்சாகச் செய்து முடித்தனர்.

தமிழரின் சுதந்திரமான வாழ்வைப் பறிக்கவென கங்கணம் கட்டி நின்ற பேரினவாதிகள் சிங்களக் காடையர்களையும் தூண்டிவிட்டு தெற்கிலும். தமிழர் தாயகத்திலும் அப்பாவித் தமிழ்களை கொன்றொழிபதன் மூலமும், அவர்களின் சொத்துக்களை அழிப்பதன் மூலமும் கொள்ளையடிப்பதன் மூலமும் விடுதலைப் போராட்டத்தை வேருடன் பிடுங்கியெறியலாமென கனவுகண்டனர்.

இன்று சமாதானம் பேசுகின்றவர்களும் பேரினவாத சிந்தனை வழியில் வந்தவர்களே.. எனினும் தமிழரின் நீதியான நேர்மையான போராட்டத்தை ஜீரணிக்க முடியாதவர்கள் என்பது வேறு கதையெனினும், எந்த அநியாயத்தைப் புரிந்தெனினும் தமிழினத்தை பேரினவாதிகள் அடிமையாக வைத்திருக்கவே விரும்பினார்கள்.

அதன் மிகமுக்கிய நோக்குதலுக்குரிய மோசமான செயற்பாடாகவே கறுப்பு ஆடி மறக்க முடியாததாகிவிட்டது. உலகில் மனித உரிமை, பயங்கரவாதம் எனப் பேசுகின்றவர்களெல்லாம். பல்லாயிரக்கணக்கில் தமிழரைக் கொன்று குவித்ததற்கு என்னதான் செய்து முடித்துவிட்டனர்? இன்னும் தமிழரை அது பிழை, இது பிழையென்று குற்றம் சுமத்துவதற்கும். தமிழரின் நேர்மையான விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கும் தான் துணை போகின்றனர்.

இதனை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் உலகின் கொம்பர்கள் எனச் சொல்பவர்கள் செய்தே வருகின்றனர்.

வாக்காளர் இடாப்பை வைத்து இது தான் தமிழனின் இடம் என்பதை அச்சொட்டாகத் தெரிந்துகொண்டு ஓடி ஒழிந்தவர்களையும் தேடிப் பிடித்து [illegible] செய்து கொடூரமாகக் கொலை செய்தவர்களை உலக நாடுகள் ஏன் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. உடனடியாக சில கண்டனங்கள் வந்ததென்பது தெரிந்த விடயம் தான் சம்பவத்தின் பின் உலக நாடுகள் என்ன செய்தன? சிங்கள தேசத்தின் நீலிக்கண்ணீரை முதன்மைப்படுத்தி பல்வேறான உதவிகளைச் செய்தன. இதனை வெல்லவும் - முறியடிக்கவும் தமிழர் உயிரைக் கொடுத்துப் போராடினர். தமிழரின் போரியல் விஞ்ஞானம் உலகின் விழிகளை விரிய வைத்தன. ஏனைய ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளும் தேசங்களுக்கு இந்தப் போர் முறை செல்லக் கூடாதென்ற ஒரே நோக்கத்துடன் அரசுக்கு அரசு என்ற ரீதியில் ஒப்பந்தங்களைச் செய்த. உதவின இதில் இந்தியாவும், அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு தமக்குள் முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ளாமல் பேரினவாதிகளை தமக்கு இசைவாக நடக்கக் கூடிய வகையில் உதவின இதன் விளைவுகளை எப்படியிருக்கும் என்பது? அவர்களின் எண்ணப்படி தமக்கும் தாம் ஆதரவு கொடுக்கும் அரசிற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று கனவு கண்டனர். என்ன நடந்ததென்பது மக்களுக்குத் தெரியும். தமிழரின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று சித்தரிப்பவர்கள் என்ன செய்தார்கள். ஆடி மாதத்தை கறுப்பு ஆடி ஆக்கியவர்கள். உயிர் குடித்ததும், வல்லுறவு கொண்டதும், சொத்துக்களைக் கொள்ளையடித்ததும். அழித்ததும் என்ன அகிம்சை வழிப் போராட்டமா? வன்முறையை தந்தவர்களுக்கு வன்முறை ரீதியாகவே பதில் கொடுப்பதில் கூட தமிழர் நீதியான வழிமுறைகளையே கையாண்டனர்.

பேரினவாதிகளின் தகவலில் மேற்கொண்ட செயற்பாடுகளில் அப்பாவி தமிழ் இளம் பெண்கள், இளம் தாய்மாரென பல நூற்றுக் கணக்கானவர்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர். இதற்கு மாற்றீடாக தமிழர் நூற்றுக் கணக்கான சிங்களப்



பெண் களை வல்லுறவு கொள்ளவில்லை. இதனை கிரிசாந்தி, லூசியா, கோணேஸ் வரி, கலா, ரஜனி, விஜிகலா, ரமணி என்பவற்றுடன் பல வெளியில் தெரியாத பெயர்களை நினைவிலிருத்தி மீள்பார்க்க வேண்டும். அன்பான சிங்களச் சகோதரர்களே எங்காவது ஒரு சிங்களப் பெண்ணின் பெயரை சொல்லுங்கள் பாாக்கலாம். ஆகவே தான் கூறுகின்றேன் வன்முறையை தந்தவர்களுக்கு மீளவும் அதனாலேயே பதில் கொடுப்பதிலும் நீதி நிறைந்திருந்ததென்று.

இது பேரினவாதிகளுக்கும், அன்னிய சக்திகளுக்கும் தெரியாததொன்றல்ல. தமிழர் என்ற நாமத்தை வைத்துக் கொண்டு பேரினவாதிகளுக்கு அடிவருடிகளாக இருப்பவர்களை எப்படிச் சொல்வது எதற்குள் சேர்ப்பது தமிழருக்கு மகிழ்ச்சியாக இருந்த ஆடி மாதத்தில் நெருப்பை அள்ளிக் கொட்டியவர்களுக்கு நெருப்பாய் தமிழர் வீறுகொண்டெழுந்ததும் ஆடி மாதத்தில் தான். ஆடி ஐந்தாம் நாள் கரும்புலி கப்டன் மில்லர் நேரெதிர் சென்று முழங்கிய முழக்கம் பதின்மூன்று படையினரின் உடல்களை கனத்தையில் ஒன்றாக வைத்து உருக்கொண்டவர்கள். மில்லரின் தாக்குதலில் நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்ட போது எங்கே தலையைப் புதைத்து வைததிருந்தனர். இதனைப் பற்றி சிங்களச் சிந் தனையாளாகளும், மக்க ளும் ஏன் கேள்வியெழு ப்பி விழிப்படையவில்லை. இதனைச் சொல்வதால் சிங்கள இளைஞாகள் படையிலிருந்து பலியாவதையிட்டு மற்று முழுதாக மகிழ்ச்சியடைந்து கூத்தாடுவதாக இந்தப் பத்தி அமைந்து விட்டதென யாரும் எண்ணி விடவேண்டாம். ஒன்று மட்டும் உண்மை. இளம் வயதுடைய சிங்கள இளைஞன் படையில் இருந்து இலங்கை இரண்டாகி விடக் கூடாதென உயிரைக் கொடுப்பதாக எண்ணுகின்றானென்றால். அவனுக்கு வரலாறு தெரியவில்லை என்பது தான் உண்மை.

தமிழரின் விடுதலைப் போராட்டம் நீதியானது, என்பதைச் சொல்வதற்கு இன்னுமொரு உதாரணத்தைச் சொல்லலாமென நினைக்கின்றேன். எமது கல்வி பற்றி அக்கறையுடன் எழுந்த போராட்ட உணர்வு. அடிமைகளாக தமிழர் இருக்க வேண்டும் என்ற செயற்பாட்டால் பேரெழுச்சியடைந்தது. இவை பற்றிய வரலாற்றுப் படிப்பினை சிங்கள சந்ததிக்கும் தேவை.

பதின்மூன்று படையினர் கொல்லப்பட்டதனால் ஆடி கறுப்பானது. அதற்கு முன்பும் சிங்களப் பேரினவாதிகள் சும்மா இருக்கவில்லை. தனிச்சிங்களச் சட்டம், பயங்கரவாதச் சட்டம், தரப்படுத்தல், திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்கான சிங்களக் குடியேற்றம். பொருளாதார வளர்ச்சிக்கான தடை, வரலாற்றுத் திரிபுகளை மேற்கொண்டதென ஏராளமானதை அடுக்கிக் கொண்டே போகும் போது தமிழின அழிப்பை செய்வதற்கு புனிதமான பௌத்த மதத்தையும், பேரினவாதிகள் ஆயுதமாகக் கையில் எடுத்தனர். அதன் பெரும் வடிவமாக அண்மையில் பொலநறுவையில் பௌத்த விகாரையொன்றுக்குள் ஆயுதமிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு தலை கவிழ்ந்து இருப்பது எப்படி நியாயமாகும்?

கறுப்பு முடிக்குள் இன்னுமொரு சோகம், துன்பம், சிங்கள தேசம் வெட்கி முக்காடு போட வேண்டியது அவர்களின் பௌத்தத்தையும் குழி தோண்டி புதைப்பதுமான செயல். சிறைச்சாலைப் படுகொலை, சிங்கள மக்களே இதுபற்றி வரலாற்றில் பொறித்து வையுங்கள். இதற்கெல்லாம் பதிலாகவே தமிழரின் ஆயுதப் போராட்டம் எழுச்சியடைந்தது.

கறுப்பு ஆடியை தந்தவர்களை ஆடியடங்கவைத்த தாக்குதல்களையெல்லாம். ஓயாத அலைகள் ஒன்று தொடக்கம் நான்கு வரையும், தீச்சுவாலை முறியடிப்பிலும், கட்டுநாயக்காவிலும் சொன்னதற்கு உங்கள் பதில் என்ன? மீண்டும் உயிர்களுக்கான மதிப்பை மனதில் வைத்தே கூறுகின்றேன். 1983 இல் பதின்மூன்று படையினர் கொல்லப்பட்டதற்கு கறுப்பு ஆடியை உருவாக்கினீர்கள். பல்லாயிரம் படையினர் கொல்லப்பட்டு. பலநூறு படையினரின் உடல்களை அனுப்பும் போது பொறுப்பெடுக்காமல் திருப்பி அனுப்பிய போது உடல்களால் எதனைச் சாதிக்க முடிந்தது?

இந்த ஆடி மாதம் அனுரா பண்டாரநாயக்க. கருணாவை சிங்கப்பூருக்கு அனுப்ப தோளோடு தோள் நின்றார். இப்படி தாமெதனையும் செய்யவில்லை என்று சொல்ல விழையும் அரசின் தலைவிக்கு கூடப் பிறந்தவர் மட்டுமல்ல, அரசின் ஒரு அங்கமுமாவர். இதற்கான பதில் என்னவாக இருக்கப்போகின்றதோ? வல்லுறவு கொண்டவருக்கு - வல்லுறவு கொள்வதன் மூலம் எப்படி பதில் இல்லையோ. அதேபோல தான் அமையும். கறுப்பு ஆடியென்று துன்பம் தந்தவருக்கு கரும்புலி ஆடியில் எப்படி உருவானதோ? என்ன சொல்ல வருகின்றேனென்றால். அரசின் முக்கிய மானவர்கள் என்று சொல்லப்படுபவர்களை தமிழர் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப் போவதில்லை. ♦

சுகாதாரம்...

# உணவுச் சுகாதாரம் தொடர்பான அறிவைப் பெறவேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்

- க.ஆ.ஜீவநாதன்

எமது நாட்டில் மத்திய அரசாங்கத்தாலும் உள்ளூராட்சி மன்றங்களாலும் உணவுச்சுகாதாரம் சம்பந்தமான விடயங்களில் சட்டங்கள் அமுல் நடாத்தப்படுகின்றன. இவைகள் முழுதாக அமுல்படுத்தப்படாவிட்டாலும் ஓரளவிற்கே அமுல்செய்யப்படுகிறன. அப்படியிருந்தும் ஏறத்தாழ 30, 40 வருடங்களுக்கு முன் இருந்த நிலையிலேயே தற்போதும் எமது உணவுச் சுகாதாரம் பேணப்பட்டு வருகின்றது. சுகநலத்திற்கொவ்வாத நிலைமைகளும் உணவுச் சுகாதாரத்தில் கையாளப்பட வேண்டிய விதிமுறைகள் பேணப்படாமையும் பாதிக்கப்பட்ட உணவை உண்பதால் ஏற்படுகின்ற குடல் சார் நோய்கள், உணவு நஞ்சூட்டல் போன்ற நோய்களில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. அவை அக்காலங்களில் இருந்த தொகையிலேயே இன்றும் இருக்கின்றன. இந்தநிலைமையை மாற்றுவதற்காக தொடர்ந்து பதவியில் இருந்த அரசாங்கங்கள் பல விதமான தந்தி ரோபாயங்களை கையாண்டும் உணவுச் சுகாதாரத்தின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சித்தும் எதிர்பார்த்த தரத்தை அடைய அவர்களால் முடியவில்லை.

வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ விடயம் சம்பந்தமாக பொது மக்கள் பத்திரிகை, டெலிவிஷன், றேடியோ மூலமாக வியாபாரிகளுக்கெதிராக வெளிப்படுத்தும் அபிப்பிராயங்கள், வலுவுள்ளதாக காணப்படுகின்றன. இதனால் இத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்ய வேண்டிய வேலையில் கணிசமான அளவு குறைகின்றது. இதன் காரணமாக உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள், உணவு கையாள்பவர்கள் தங்கள் நிறுவனங்களையும் உணவுப் பொருட்களையும் உயர்தரத்தில் வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளனர். அது மாத்திரமல்ல பொது மக்கள் அபிப்பிராயத்திற்கு அவர்கள் அஞ்சுகின்றார்கள்.

எங்களுடைய நாட்டில் ஏன் இந்த ஊக்கமின்மை, பொதுமக்கள் தங்கள் அபிப்பிராயங்களை வளர்ச்சியடைந்த நாடுகள் போல் தெரிவிப்பது மிகவும் அரிது, உணவு நஞ்சூட்டல் பெருந்தொகையாக காணப்பட்டர் அச்சமயங்களில் மாத்திரம் அந்நோய் குறைந்தவுடன் அவர்கள் வேகம் தணிந்து துப்பரவாக அற்றுப் போவதையும் மக்கள் நடந்தவற்றை முற்றாக மறந்து போவதையும் நம்மால் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கான காரணம் என்னவெனில் எங்களது மக்களில் ஏறத்தாழ 90 வதமாக மாணவர்கள். தாங்கள் உணணும் உணவின் தரம், குணம், தன்மை அவை எங்கே எப்படியான சூழலில் தயாரிக்கப்படுகின்றன என்பதை பற்றி சிந்திப்பதே இல்லை. எவ்வகையான உணவாக இருந்தாலும் அவர்களுடைய பசியும் தாகமும், தீருமானால் அனேகமானோர் அதையிட்டு திருப்தி அடைகின்றனர். ஏனையோர் அதிருப்தி அடைவதால் அதற்கு மேல் வேறொன்றும் செய்யமுடியாது தமக்குள்ளே முணுமுணுத்துக் கொள்கின்றார்கள். இதற்கு மேல் வேறொன்றும் செய்ய அவர்களால் முடிவதில்லை. இவற்றுக்கெல்லாம் பிரதான காரணம் மக்கள் மத்தியிலே இவ்விடயம் சம்பந்தமாக கல்வியறிவு போதாமையே ஆகும்.

இத்தகைய வாடிக்கையாளருக்கு / பாவனையாளருக்குத்தான் எங்கள் நாட்டிலுள்ள உற்பத்தியாளர்களோ, விற்பனையாளர்களோ, அல்லது ஹோட்டல், தேனீர் கடையாளர்கள் உணவுப்பண்டங்களை விற்பனை செய்து வருகின்றனர். மக்கள் மௌனமாக இருப்பதால் இவர்களும் தம் இஷ்டப்படி நடந்து கொள்கின்றார்கள். அது மாத்திரமல்ல அவர்களும் தமது வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் போல் விடயம் சம்பந்தமான போதிய அறிவில்லாதவராக இருக்கின்றனர்.

சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு இதுவரை காலமும் உபயோகப்படுத்தப்பட்ட 'சுகாதாரக் கல்வியை' இதற்கு முக்கியம் என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது. அத்துடன் சுகாதாரக்கல்வியை நாங்கள் குறைவாக மதிப்பிடவும் முடியாது. சுகாதார உத்தியோகத்தர்களிடையே இது ஒரு கூரிய ஆயுதமாக இன்று இருந்து வருகின்றது. நிலைத்து நிற்கக் கூடிய பலனைத்ரவல்ல அறிவை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு இந்த ஆயுதமாக சுகாதாரக் கல்வி பாவிக்கப்படுகின்றது. சுகாதாரக் கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் நாட்டு மக்களின் சுகநலத்தை பேணுகின்ற கடமைகளை பொறுப்பேற்றுள்ளமையால் உணவுச் சுகாதாரம் சம்பந்தமாக (1) யாருக்கு (2) எங்கு (3) எப்படி இந்தச் சுகநலக்கல்வியை மக்களுக்கு எடுத்துரைப்பது என்பது பற்றி தெரிந்திருத்தல் அவசியம்.

**சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு இதுவரை காலமும் உபயோகப்படுத்தப்பட்ட 'சுகாதாரக்கல்வியை' இதற்கு முக்கியம் என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது.அத்துடன் சுகாதாரக் கல்வியை நாங்கள் குறைவாக மதிப்பிடவும் முடியாது.**

## 1. பாடசாலைகள்.

சுகாதாரப் பழக்க வழக்கங்கள் உடனடியாக கையாளப்பட்டு வருபவையல்ல, அவை சிறு வயதிலிருந்தே ஒருவருடைய மனதில் பதியக் கூடியதாக கல்வி யூட்டப்பட்டு வந்தால் இது முதிர் வயதிலும் அவர்களுடன் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும். எனவே இந்தத் துறையில் சுகாதாரத்துறையினர் மாத்திரமன்றி பாடசாலைகளும் ஒரு பகுதிப் பொறுப்பையேற்க வேண்டும். பாடசாலை ஆசிரியர்களால் புகட்டப்படும் சுகாதாரக்கல்விக்கு மேலதிகமாக அந்தப் பகுதி சுகாதார உத்தியோத்தர்கள் பயிற்சி முறையான விளக்கங்களை மாவணர்களுக்கு பின்வரும் விடயங்களில் அளிக்கலாம்.

1. சாப்பிடமுன் சவர்க்காரம் போட்டுக் கை கழுவுதல்.
2. அவர்களுடைய கைகள், மூக்கு தொண்டை, குடல் போன்றவற்றில் பக்றீரியாக்கள் எப்படி வளர்கின்றன. என்பதை 'பெற்றிடிஸ்' மூலம் காண்பித்தல்.
3. உணவு தயாரிப்பில் சம்பந்தப்படுகின்ற உபகரணங்களை பூரணமாக சுத்தம் செய்வது.
4. சுகாதார முறையில் உணவு தயாரிப்பது.
5. உணவு உற்பத்தி நிலையங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று பார்வையிடச் செய்தல்.

## உணவு கையாளுபவர்கள்.

இவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. உரிமையாளர்கள் / முகாமையாளர். மேற்பார்வையாளர்கள்.
2. நிலையங்களில் உணவு தயாரிப்பவர்கள், விநியோகிப்பவர்கள்.
3. வீடுகளில் உணவு தயாரித்து கடைக்கு விநியோகம் செய்பவர்களும், வீடுகளில் உணவு தயாரிப்பவர்களும்.

இந்த வகையினரில் 1 ஆம் 2ஆம் வகையினரே சுகாதார உத்தியோகத்தர்களால் ஓரளவு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். 3 ஆம வகையினரும் 1ஆம், 2ஆம் வகையினர் போல் உணவு உற்பத்தியில், விநியோகத்தில் ஈடுபட்டுள்ளமையால் முற்றாக கண்காணிக்கப்பட வேண்டியவர்களாவர். 1ஆம் 2ஆம் வகையினரிலும் பார்க்க 3 ஆம் வகையினருக்கு உணவு சுகாதாரம் சம்பந்தமான அறிவு மிகவும் குறைவு.

இந்த வகையிலான வியாபார நோக்கத்திற்காக உணவு தயாரிப்பவர்களுக்கு சுகநலக் கல்வியளிப்பதில் இரு முறைகளைக் கையாளலாம்.

### 1 முதலாவது முறை

அவர்களை ஓரிடத்தில் கூட்டி விரிவுரை மூலம், செயல்முறை மூலம், கலந்துரையாடல் மூலம் கல்வியூட்டல் கட்புல சாதனங்கள் மூலம் காட்டுதல்.

### 2. இரண்டாவது முறை

அவர்களை ஓரிடத்தில் கூடுவதை விட்டு அவர்களிடம் சென்று நேரடியாக கல்வியூட்டல், இதை பொது சுகாதார பரிசோதரும், சுகநலக் குழுவினரும் சேர்ந்து செய்ய முடியும்.

இது மாத்திரமன்றி பாவனையாளர்களுக்கும் சுகநலக் கல்வியூட்ட வேணடியது அவசியமாகின்றது. இவற்றை அந்தப் பகுதி அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் செய்ய முடியும்.

### 3. வைத்தியசாலைகள்

வைத்தியசாலைகளிலும் உணவுச் சுகாதாரம் சம்பந்தமான கல்வியூட்டலை ஊக்குவித்தல் அவசியம் இந்த விடயம் அனேகமாக எங்கள் பகுதிகளில் அலட்சியம் செய்யப்படுகின்றது. வியாபார ஸ்தாபனங்கள் போன்று வைத்தியசாலை சமையல் அறைகளிலும் சுகநலத்திற்கொவ்வாத நிலையில் உணவு தயாரிப்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே இத்தகைய வகையினருக்கு கல்வியூட்டுவதிலும் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் கவனம் செலுதத வேண்டியுள்ளது.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு*
*எய்த உணர்ந்து செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இன்றைய துக்கதினம் அரசுக்கு கூறும் செய்தி!

இன்று கறுப்பு ஜூலை என்று அழைக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் ஆடிக் கலவர நினைவுநாள் - தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் எங்கும் துக்கதினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு, அவர்களின் இருப்புப் குறித்த அச்சத்தையும், தமிழர் தம் பாரம்பரிய வாழ்நிலம் மீதான அவர்களின் ஆதிக்க உரிமை தொடர்பான சந்தேகங்களையும், சிங்களப் பேரினவாதமும், அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்துவிட்ட வரலாறு காணாத வன்முறையயடுத்து, அந்த ஆடிக்கலவரம் ஏற்படுத்திய இருளும், இரத்த நெடியும் கலந்த நாட்களின் அவலம் இன்னமும் நெஞ்சில் அலைமோத, நாம் அந்தத் துயர நினைவுகளில் மூழ்கித்துக்கம் அனுஷ்டிக்கும் நாளாக இன்றைய தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ஆனாலும் இது அழுவதற்கான நாள் அல்ல......

நமக்கு இழைக்கப்பட்ட வரலாற்று ரீதியான அநீதியின் வடுக்களை நினைவு கூருதல் என்பது துயரங்களில் மூழ்குவதற்கு அல்ல... மாறாக நாம் கடந்து வந்த பாதையை, நமது வரலாறு நமக்குக் கற்பித்துள்ள வரலாற்று அனுபவப் பாடங்களை, நாம் நம் தலைமுறையினருக்கு நினைவூட்டி, அவர்களின் எதிர்காலத்தில், அவர்கள் தங்கள் மண்ணையும், அவர்களின் வாழ்வியல்-அரசியல் உரிமைகளையும் எப்படியெல்லாம் அர்ப்பணிப்புணர்வுடன் கூடிய, தேசிய உணர்வுடன் பாதுகாக்க எத்தகைய போராட்டங்களுக்கெல்லாம் முகம்கொடுக்க வேண்டிய சூழலை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதை உணர்த்துவதற்காகத்தான்.

இன்று நாம் - அந்த கறுப்பு ஜூலை கொடுமைகள் நடந்து இரு தசாப்தங்களை கடந்துள்ளநிலையில்- அன்று முதலே எம்மை அழிக்கக் கங்கணம்கட்டிக் கொண்டு நியாயமற்றதும், மனித உரிமைகளுக்கு எதிரானதும், அநாகரிகமானதுமான, பேரினவாதிகளின் இராணுவ ரீதியிலான இனவழிப்பு யுத்தநடவடிக்கையை ஆயுத ரீதியில் எதிர்கொண்டு, அவர்களுக்கு வரலாற்று ரீதியில் பாடம் கற்பித்து நிமிர்ந்து நின்றாலும், நாம் எமது விடியலுக்காக - எங்கள் தாயகமண்ணில் விடுதலைக்காக இன்னமும் எவ்வளவோ தியாகங்களைச் செய்யவேண்டியுள்ளதையே இன்றைய இலங்கையின் அரசியல் யதார்த்தம் உணர்த்துவதாக உள்ளது.

1983 ஆம் ஆண்டின் பின்னர் - போர்க்கோலம் தமிழ் மக்கள், அந்த ஆடிக்கலவரம் போல் இன்னொரு வரலாற்றுக் கொடுமையை தம்மீது சிங்களப் பேரினவாத ஆட்சித் தலைமைகள் நிகழ்த்தும் துணிச்சலை இல்லாமல் செய்தமையானது, இன்று அவர்களை அடக்குமுறைகள் அனைத்திற்கும் எதிராக நிமிர்ந்து நின்று சர்வதேச ரீதியில் தங்களின் உரிமைகளுக்கான நியாயப்படுத்தல் குரலை ஓங்கி ஒலிக்க வைத்துள்ளது.

1983 இன் ஜூலை - தமிழ் மக்களின் உணர்வுகளை விழித்தெழச் செய்து, வீறுகொள்ள வைத்ததென்றால், இதன் பின்னரான இரு தசாப்த கால யுத்தத்தில் ஏற்பட்ட தோல்விகள், இழப்புகள், பின்னடைவுகள் அனைத்தும் இலங்கை அரசுக்கு அறிவுபூர்வமான தாக்கமேற்படுத்தும் வகையில் எதனையும் ஏற்படுத்தவில்லை என்பதே, இன்னும் இலங்கையில் அமைதி ஏற்படாமைக்குக் காரணமாகும்.

பேரினவாதம் ஏற்படுத்திய மந்தபுத்தியானது, போரார்வம் கொண்ட அரசுகளுக்கு தமது வரலாற்றுத் தவறுகள் குறித்துச் சிந்திக்கும் தகைமையை இழக்கவைத்து விட்டது என்றே கூறவேண்டும். இரு பெரும் சிங்கள அரசியல் தலைமைகளும், இனப்பிரச்சினையில் மாறி மாறி ஒருவருக்கு மற்றவர் சளைத்தவர் இல்லையென நிரூபிக்கும் வகையில் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளும், துரோகங்களும் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாதவை.

1983 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக் காலக் கொடுமைகளுக்காக இப்போது ஜனாதிபதி சந்திரிகா, இருபத்தொரு ஆண்டுகளின் பின்னர், பகிரங்கமாக மன்னிப்புக் கோருவது வேடிக்கையான விடயமாகும். இதுவரைகாலமும் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகள் அனைத்துக்கும் இன்றைய ஜனாதிபதியும் பொறுப்பேற்க வேண்டியவரே ஆவார்.

இந்த அரச அனுசரணையுடன் கூடிய பயங்கரவாத நடவடிக்கைகளின் வடிவங்கள் காலத்திற்குக் காலம் மாறினாலும், அதன் இலக்கு இன்னமும் தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்மூலமாக்குவதையே குறியாகக் கொண்டுள்ளது என்பதையே சமாதானச் சூழலிலும் இன்று அரசு கையாண்டு வரும் இராணுவ அரசியல் மூலோபாயங்கள் நிரூபித்து வருகின்றன. இந்தநிலையில் - இன்று மன்னிப்புக் கேட்கும் குரலின் உண்மைத்தன்மை சந்தேகத்துக்கிடமான ஒன்றாகவே உள்ளது.

இந்தச் சந்தேகம் தமிழ் மக்களுக்குத் தமது எதிர்காலம், குறித்த சகல நம்பிக்கைகளையும், சமாதானத் தீர்வு குறித்த எதிர்பார்ப்புக்களையும் நாசம் செய்வதாகவே உள்ளது.

இதனையும் இன்றைய துக்க தினம் வெளிப்படுத்தவே செய்கிறது.

காலம் கடந்த மன்னிப்புக் கோரலை விடவும், காலத்தின் அவசியமான சமாதான முயற்சிகளில் ஆத்மார்த்தமான நடைமுறைகளைக் கையாள்வதே அவசியமாகும். இதனை அரசோ, ஜனாதிபதியோ, உறுதிசெய்யாத வரை மன்னிப்புக் கோரல் ஒரு அரசியல் உள்நோக்குடன் கூடிய நாடகமாகவே பதிவு செய்யப்படும் என்பதை இன்றைய துக்க தினச் செய்தியாக அரசு எடுத்துக்கொள்வது நல்லது.

# நாடும் நடப்பும்




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# எமது தேசத்தின் கட்டுமானப் பணிகளில் இணைந்து கொள்ளாதிருப்பது துரோகம்!

**யாழ்.தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சிறில்**

எமது தேசத்தின் கட்டுமானப் பணியிலே எம்மை இணைத்துக் கொள்ளாதிருப்போமாயின் அது எமது தேசத்திற்கு நாம் செய்யும் துரோகமாகும் என - யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் சொலமன் சூ.சிறில் தெரிவித்தார்.

அண்மையில் அளவெட்டி மகாஜனா சபை மண்டபத்திலே நடைபெற்ற தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தச் சங்கம நிகழ்வில், தேசியக் கொடியினை சிறில் ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப்பிரிவைச் சேர்ந்த ம.கனகலிங்கம், ம.மகேந்திரசர்மா, வைத்திய கலாநிதி ருக்மணி, சங்கீத ஆசிரியர் வி.கே. நடராஜா, வலி.வடக்கு முன்பள்ளி இணைப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் சிறில் தொடர்ந்து உரையாற்றுகையில் - எமக்கு மிகவும் சிறந்ததொரு வழிகாட்டியாக எமது தலைவர் கிடைத்துள்ளார். இதனால் நாம் பெருமையடைகின்றோம். அதேவேளை, தேசியஎழுச்சிப் பேரவையிலுள்ள ஒவ்வொருவரும் தமது பெறுமதிகளையும் உணரவேண்டும்.

ஏனெனில், உங்களால் உருவாக்கப்படும் ஒவ்வொரு ஊரக ரீதியான திட்டங்களையும் எமது தேசத்தின் தலைவர் பார்வையிடுவார்.

தலைவரால் இடப்படும் திட்டங்கள் எப்போதுமே தோற்றது கிடையாது. அதேபோன்றே தேசிய எழுச்சிப் பேரவைகளும் நிச்சயமாக தேச கட்டுமானப்பணியிலே பெருவெற்றியைப் பெறும்.

இன்று சிங்கள தேசம் போரை முன்னெடுக்க முடியாமலும், சமாதானத்தை முன்னெடுக்க முடியாமலும் திரிசங்கு சொர்க்க நிலையிலுள்ளது. விடுதலைப்புலிகளின் அனுசரணையின்றி அரசால் எதையுமே முன்னெடுக்க முடியாத நிலையேயுள்ளது. சர்வதேச நிதியுதவியைப் பெறுவதாயின், அதிலும் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பை அரசு பெறவேண்டியுள்ளது.

எமது மக்கள் எதற்கும் அஞ்சத்தேவையில்லை. எமது தேசத்தைக் கட்டியெழுப்பவும் அதனைப் பாதுகாக்கவும் எமது உயிரினும் மேலான தலைவர் உள்ளாரெனவும் அவர் தெரிவித்தார்.

## பலாலி இராணுவ வைத்தியசாலை புதிய விடுதிக் கட்டடம் திறப்பு!

பலாலி இராணுவ ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான புதிய விடுதிக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் கடந்த 21 ஆம் திகதி யாழ்.குடாநாட்டுக்கான படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவினால் திறந்து வைக்கப்பட்டது.

புதிய விடுதிக்கட்டடத்தில், ஈ.சி.ஜி பிரிவு, வைத்திய அதிகாரியின் அலுவலகம், நோயாளர்களுக்கான உணவகம் ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டட நிர்மாணத்திற்கென 7 இலட்சத்து 27 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது. இந்தக் கட்டடத்தின் மேல்மாடியில் பயிற்சி மண்டபம், நோயாளர் விடுதி ஒன்றினையும் இந்த வருடத்திற்குள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## உதவி வழங்கும் நாடுகளின் வருடாந்த மாநாடு நவம்பரில்

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் வருடாந்த நிதி மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெற உள்ளதாகத் திறைசேரியின் செயலாளர் கலாநிதி பீ.வி ஜயசுந்தர தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டுக்கு உதவிவழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் வருகைதரவுள்ளனர்.

இந்தமாநாட்டில் அரசு - அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டங்களைச் சமாப்பிக்கவுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த திறைசேரியின் செயலாளர் சமாதான முயற்சிகளால் அதிகளவிலான பயனை வடக்கு - கிழக்கு மக்களே பெறுவார்கள் என்றும் தற்பொழுது தனியார் மயமாக்கல் அரசினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் ,விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கிவருவதாகவும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பை வழங்குவதற்குமான அனைத்து நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் இந்நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

## வெலிக்கடைப் படுகொலை நினைவு இன்று திருமலையில் அனுஷ்டிப்பு!

வெலிக்கடை தியாகிகள் நினைவு தினத்தை தமிழ்மக்கள் பேரவையும், தமிழீழ விடுதலை இயக்கமும் இணைந்து இன்று திருகோணமலை தியாகிகள் திறந்தவெளியரங்கில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாகவும், சிறப்பு அதிதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.எழிலன் கலந்துகொள்ளவுள்ளதாக தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்தார்.

இன்றைய நாளை தமிழ்மக்கள் அனைவரும் பூரண துக்க தினமாக அனுஷ்டித்துக் கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு எமது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் வெஞ்சிறையில் உயிர் நீத்த உடன்பிறப்புக்களை எம் நெஞ்சில் நிறுத்தி துக்கதினமாக அனைவரும் அனுஷ்டிக்க வேண்டு மெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஜாதிக ஹெல உறுமயவுடன் இ.தொ.கா புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு ஏற்பாடு!

ஜாதிக ஹெல உறுமயவுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான முயற்சிகள் இறுதிக்கட்டத்தினை அடைந்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரசோ அல்லது ஹெல உறுமயவோ அரசுக்கு ஆதரவு வழங்குவதாயின் முதற்கட்டமாக தமக்குள் கலந்துரையாடி ஒரு முடிவினைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் கோரிக்கையினை அடுத்தே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு ஜாதிக ஹெல உறுமய இணக்கம் தெரிவித்துள்ளது.

ஹெல உறுமய அரசிற்கு ஆதரவு வழங்குவதாகத் தீர்மானித்தால், அரசினை அமைப்பது தொடர்பாக இது வரையும் தொழிலாளர் காங்கிரசுடன் இருந்துவரும் பேரம்பேசும் சக்தி அற்றுப்போய்விடும் என்பதாலே தொண்டமான் நுட்பமான ராஜதந்திர நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கடந்த 22ஆம் திகதி இரவு ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

இந்தச்சந்திப்பின்போது - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்கினால், கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி சம்மதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## 'முதுசம்' ஒரு பார்வை

-சோ.குமுதா-

# உடன் நிகழ்கால வாழ்வு குறித்த எண்ணம் இழையோடும் ஓவியங்கள்

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரின் கலைவட்டம் நடாத்திவரும் 'முதுசம்' நிகழ்ச்சித் தொடரில் - இதுவரை மிகமுக்கிய 9 நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் எமது முதுசங்களாக நாம் பேணிப்பாதுகாக்கவேண்டிய கலை பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், அவை நிகழ்த்தப்பட்ட காலத்தின் தேவையை உணர்த்தும் வகையிலும் இடம் பெற்றுவந்துள்ளன.

அந்தத் தொடரின் 10 ஆவது நிகழ்வு '13 யாழ்ப்பாணத்து ஓவியர்களின் ஓவியங்களின் காட்சி" பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தில் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த



எம்.நிலாந்தன்

மாதம் 18 ஆம் திகதிவரை இடம் பெறுகிறது.

இந்த ஓவியர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். எனினும், சிலர் எமது 20 வருடகால போராட்டச் சூழலில் தாயகத்தை விட்டு வெளியேறி, வேற்று நாடுகளில் வசிப்பவர்கள். இவர்கள் இந்தக் காலத்தில், தாயகத்தில் ஏற்பட்ட அவலங்கள், இழப்புகள், துன்பங்கள், இது பற்றிய ஏக்கங்கள் அனைத்தையும் ஏதோ ஒரு வகையில் அனுபவித்தவர்களே. ஆனால், அவை வெறும் அனுபவங்களாக மட்டுமன்றி, ஏனையோருக்கும் பறைசாற்றும் வகையிலும் ஓர் வரலாற்று ஆதாரமாகப் படைப்பினூடு வெளிப்படுத்தியமையே இவர்களின் முக்கியத்துவமாகும்.

இந்தவகையில் - இங்கு காட்சிப் படுத்தப்பட்ட ஓவியங்கள் அனைத்திலும், உடன் நிகழ்கால வாழ்வு பற்றிய ஓர் எண்ணம் அல்லது அனுபவம் இழையோடிச் செல்வதனை அவதானிக்க முடிகிறது.

சாதாரணமாக தாயகத்தில் வசிப் போரின் கருத்து அல்லது எண்ணம் 'உள்நாட்டில (தாயகத்தில) வசிப்பவர்களுக்கு மட்டுமே போரின் துன்பமும், அவலமும், ஏக்கமும் உள்ளன. வெளிநாடுகளில் வசிப்போருக்கு இவ்வாறான எதுவித துன்பதுயரமும் இன்றி உள்ளனர்' என்பதாகும்.

ஆனால், இந்த எண்ணத்தை இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள 'வெளிநாட்டு ஓவியர்களின் ஓவியங்கள் உடைத்தெறிகின்றன.

உதாரணமாக - இந்தக் காட்சியிலுள்ள ஓவியங்களை நோக்கும் போது, அருந்ததியின் '**Corner of the house**' என்ற ஓவியத்தில் கதவுகளைத் தாண்டி, ஒரு மூலையில் எரிந்துகொண்டிருக்கும் நெருப்புக் காட்டப்பட்டுள்ளது. இது பெண்ணிய அடிமையிலும், அரசியல் சமூக ரீதியிலும் பல்வேறு அர்த்தங்களைத் தருவதாக அமைகிறது.

அடுத்து, அனுஷியாவின் காப்பு என்ற ஓவியங்கள் முடிவற்றதும், முறிவற்றதும், தொடர்பறுக்கப்படாதது மான கோடுகளாக மட்டுமே புலப்படுகின்றது. ஆனால், இதன்மூலம் வெளிநாட்டில் வாழும் தனக்கும், தனது தாயகத்துக்கும் அல்லது தனது தாயகம் பற்றிய ஞாபகம், நினைவுகளுக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்த முயல்வதாக ஓவியர் குறிப்பிடுகிறார். இதை ஆழ்ந்து நோக்குவதன்மூலம் அறியமுடியும்.

இங்கு தனது தாயகம் வெறும் சூழலால் அல்லது புவியியல் எல்லையினால் மட்டுமே பிரிந்துள்ளதேயன்றி - மனத்தால் - உணர்வால் அல்ல என்பது தொனிக்கின்றது.

அடிப்படையில் இதே உணர்வை இன்னொரு விதத்தில் வெளிப்படுத்துகின்றது. நந்தாவின் '**Collage**' ஓவியம். இதில் போர்க்கால சூழ்நிலையில் - தாயகத்துக்கும், வெளியிடத்துக்கும் இடையேயான தொடர்பு கொள்ளும் ஒரே ஊடகமாக கடிதம் காணப்பட்ட நிலையில், இவர் தனக்குத் தாயகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற கடிதங்களை அவ்வாறே பல கோணங்களில் 'ஒட்டி' உருவாக்குவதன்மூலம், தாயத்தின் நினைவுகளையும் அதன் மீதான ஏக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். இன்று அந்தப் படைப்பு நினைவுகளாகிப் போன காகிதங்களை மீட்டெடுக்கின்றது.

ஓவியர் வாசுகி இந்தக் காகிதம் பற்றிய நினைவுகளை 'அம்மாவின் கடிதம் (**Letter form Amma**) என்ற படைப்பினூடு இன்னொரு கோணத்தில் வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன், இவரது ஓவியங்கள் புலப்பெயர்வின் பிற்பட்ட காலப்பெண்களின் நிலை, ஏக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. இதில் '**Kirishanthy**' என்ற படைப்பு - எமது கடந்தகால வேதனை மிகுந்த நிகழ்வுகளைச் கிளறச்செய்கின்றன.

அடுத்து வைதேகியின் '**Strange in my own land**' என்ற ஓவியம் - தாயகத்தில் முகம் என்பதைவிட, அடையாள அட்டை என்பது பாதுகாப்பு ஆதாரமாகின்றது. அதன்மூலம் தமது சொந்த நிலத்திலேயே எவ்வளவுதூரம் தம்மை அந்நியராக்குகின்றது போன்ற விடயங்களை வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டு, எம்மோடு தொடர்பாடவைக்கின்றது.

இவ்வாறே சானாதனனின் ஓவியங்கள் - தாயகத்தின் உடன் நிகழ்கால வாழ்க்கையை வேறுவிதத்தில் சித்தரிக்கின்றது. உதாரணமாக - '**The musical home**' என்ற படைப்பு, போராட்ட காலத்திலிருந்து இன்றுவரை எமது மனத்திலுள்ள எமது வீடுகள் பற்றிய வேதனையையும், இயல்புநிலைக்குப் புறம்பான இருமை நிலையையும் கொண்ட அனுபவத்தை அழகாக வெளிப்படுத்துகின்றன.

> *"ஒவ்வொரு நல்ல படைப்பாளியும் எதனைக் கொண்டிருக்கின்றானோ அதனையே வெளிப்படுத்துகின்றான்" என 'ஜக்ஷன்பொலக்' கூறுவதுபோல இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஓவியங்கள் ஒவ்வொன்றும் அந்தந்தக் கலைஞர்களின் எண்ணம், அனுபவம், உணர்வு என்பவற்றின் வெளிப்பாடாகவே அமைகின்றன.*

இதுபோன்றே '**MINES**' (மிதிவெடி) என்பது வளம் பொருந்திய பெண்ணாகச் சித்தரிக்கப்படும் நிலத்திலிருந்து அகற்றப்பட்டாலும், அது பற்றிய நினைவுகள் சந்ததி சந்ததியாக மனித உற்பத்திக்கருவிலேயே விதைக்கப்பட்டு, காவிச்செல்லப்படும் என்பதை இன்னொரு படைப்பினூடு வெளிப்படுத்தியுள்ளார். இந்தப் படைப்புகள் ஆழமான உட்பொதிந்த அர்த்தத்தையும், அனுபவத்தையும் கொண்டமைந்துள்ளன.

இவ்வாறான இளம் சந்ததி ஓவியர்களிடமிருந்து கனகசபை, இராசையா, இராசரத்தினம் ஆகிய மூவரதும் ஓவியங்கள் வேறானவை. இராசையாவினதும், கனகசபையினதும் ஓவியங்கள் - உணர்வு, உள்ளடக்கரீதியில் இயற்கைக் காட்சிச் சித்தரிப்பாக இருப்பினும், அவை கூட தாயகத்தின் இயற்கைக்சூழலே.

எம்மிடையே நகரமயமாக்கலினூடு காணமுடியாத, மன அமைதிதரத் தக்க கிராமியச்சூழலும், வாழ்வும் சித்தரிப்பதனூடாக எமது கடந்த கால வாழ்வுபற்றிய கழிவிரக்கமாக இவை அமைந்துள்ளன. ஏனைய ஓவியங்களின் துன்பகரமான அனுபவத்தினிடையே இவ்வாறான படைப்புகள் கண்ணுக்குக் குளிர்ச்சியையும், அமைதியையும் தருகின்றது.

ஆனால், இவை அனைத்திலிருந்துமே மாறுபட்ட அனுபவத்தைத் தருவதாகத் தனித்து நிற்பது இராசரத்தினத்தின் 'மெய்யுரு' (**Portrait**) ஓவியங்களே. இவர் யாழ்ப்பாணத்தின் சிறந்த 'மெய்யுரு ஓவியர்' (**Portrait Painter**) என்ற வகையில் இவரது ஓவியங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

இவ்வாறாகப் பார்க்கும்போது, இந்த ஓவியக் காட்சியானது - உடன் நிகழ்கால வாழ்வின் அதிர்வுகளாக உள்ளதினை அவதானிக்கலாம். "நான் கலையை நம்பவில்லை, கலைஞனையே உண்மையாக நம்புகிறேன்" என்ற 'மார்ஷல் துஷாம்ப்' கூறுவதை இங்கு சிறிதுமாற்றி "நான் கலையை நம்புகிறேன். ஏனெனில், நான் வாழும் காலத்தினைப் பிரதிபலிக்கின்ற கலைஞனை உண்மையாக நம்புவதனால்" எனக் கூறலாம் போலத் தோன்றுகின்றது.

ஏனெனில், அந்தளவுக்கு மிகவும் எமது உடன்நிகழ்கால வாழ்வின் வரலாற்று ஆதாரங்களாக இந்தப் படைப்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

"ஒவ்வொரு நல்ல படைப்பாளியும் எதனைக் கொண்டிருக்கின்றானோ அதனையே வெளிப்படுத்துகின்றான்" என 'ஜக்ஷன்பொலக்' கூறுவதுபோல இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஓவியங்கள் ஒவ்வொன்றும் அந்தந்தக் கலைஞர்களின் எண்ணம், அனுபவம், உணர்வு என்பவற்றின் வெளிப்பாடாகவே அமைகின்றன.

இதன் எமது உடன்நிகழ்கால வாழ்வு என்பது - எம்மிடையேயும், அதேவேளை புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் மக்களிடையேயும் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தியுள்ளது என்பதை ஒரே கூரையின்கீழ் பல்வேறுபட்ட ஓவியங்களினூடு உணரமுடிகின்றது.

இதன்மூலம் இவ்வாறான படைப்புகளும், படைப்பாளிகளும் யாழ்ப்பாணத் தமிழர்களின் போர்க்கால வாழ்க்கையை பல்வேறு நிலைகளில் பதிவு செய்கின்றார்கள்.

அந்தவகையில் 'முதுசம்' பல்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. ✪

# உடுவில் கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(உடுவில்)

உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு -

### பிரிவு - 1

**எழுத்து**

பா.ரெஜிசியா (உடுவில் அ.மி.த.க. பாடசாலை), சி.ஜெஞ்சி (ஏழாலை மகாவித்தியாலயம்), உ.நிசாந்தன் (புன்னாலைக்கட்டுவன் அ.மி.த.க. பாடசாலை).

**வாசிப்பு**

மோ.சோபிகா (ஏழாலை சைவ மகாஜனா), சு.மலர்விழி (ஏழாலை தெற்கு அ.மி.த.க), இ.ஹேகிலானி (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), ப.திருமகன் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்).

**ஆக்கத்திறன்**

அ.அனுசாந் (தாவடி இ.த.க.பாடசாலை), மா.தர்சிகா கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை), கோ.சங்கீதா (ஏழாலை சைவ மகாஜனா), நா.சபேசன் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்).

**பேச்சு**

த.சிவதீபா (இராமநாதன் கல்லூரி), வி.திவாகரன் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்), ஜெ.டென்ஸ்மன் (ஏழாலை தெற்கு அ.மி.த.க.).

**பாவோதல்**

யோ.நிதூஷிகா (ஏழாலை தெற்கு அ.மி.த.க), த.துஷாந்தன் (உடுவில் மகளிர் கல்லூரி), ப.கஜனா மயிலணி சைவ மகாவித்தியாலயம்).

**இசையும், அசைவும்**

இ.வேணுஷா (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்), ப.லக்ஷனா (ஏழாலை தெற்கு அ.மி.த.க), அ.ஆன்ஜொலிக்கா (உடுவில் மல்வம் றோ.த.க.பாடசாலை).

**தனி நடனம்**

சி.சிவகாசிகா (உடுவில் மகளிர் கல்லூரி), ச.கிருஷ்ணலோஜினி) சுன்னாகம் றோ.க.த.க), வி.விஜிதா (இணுவில் மத்திய கல்லூரி).

### பிரிவு - 2

**வாசிப்பு**

போ.தனுஷாயினி (இணுவில் மத்திய கல்லூரி), உ.உஷாநந்தினி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), பா.ஜொய்சி (புன்னாலைக் கட்டுவன் அ.த.க.பாடசாலை).

**கட்டுரை, கடிதம் வரைதல்**

அ.ஹேமா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), ஜெ.தட்ஷயினி (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ச.வைரவி (இணுவில் மத்திய கல்லூரி).

**பேச்சு**

சி.சாம்பவி (உடுவில் மகளிர் கல்லூரி), ம.தக்ஷாயினி (இணுவில் இந்துக் கல்லூரி), ஜெ.எழிலரசி (தமிழ்க் கந்தையா வித்தியாலயம்).

**பாவோதல்**

க.ஒமேக்கா (உடுவில் மகளிர் கல்லூரி), சௌ.தர்சிகா (தமிழ்க் கந்தையா வித்தியாலயம்), வி.விக்னராஜ் (இணுவில் இந்துக் கல்லூரி),

**இசை தனி**

இ.மாதங்கி (இணுவில் இந்துக் கல்லூரி), சி.றஜித் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), அ.அன்றுஜா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தனி நடனம்**

த.மோகனப் பிரியா (கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி), சி.தக்ஷிகா, (உடுவில் மகளிர் கல்லூரி), ம.சஞ்சினி (இராமநாதன் கல்லூரி).

### பிரிவு - 3

**கட்டுரை வரைதல் கடிதம் எழுதுதல்**

த.கல்யாணி (இணுவில் மத்திய கல்லூரி), க.குகப்பிரியன் (தாவடி இ.த.க.பாடசாலை), த.வைஷ்ணா (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி),

**பேச்சு**

ஸ்ரீ.ராகவர்த்தினி (இராமநாதன் கல்லூரி), சி.சிந்து (இணுவில் மத்திய கல்லூரி), ப.சோபிகா (உடுவில் மகளிர் கல்லூரி),

**பாவோதல்**

உ.கிருஸ்சனா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), சௌ.தாரகா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), பு.மேரிஸ்டெலா (உடுவில் மகளிர் கல்லூரி)

**தனி இசை**

இ.மதுசூதனன் (இணுவில் மத்திய கல்லூரி), அ.அமிர்சிந்துஜன் (இணுவில் மத்திய கல்லூரி), ச.சுயானி (உடுவில் மகளிர் கல்லூரி)

**தனி நடனம்**

சி.நிரஞ்சனா (உடுவில் மகளிர் கல்லூரி), சு.லக்ஷா (இராமநாதன் கல்லூரி), ப.பவன் இணுவில் மத்திய கல்லூரி.

### பிரிவு-4

**கட்டுரைவரைதல் இலக்கியம் நயத்தல்**

நா.கௌதமி (குப்பிளான் விக்கேஸ்வரா மகா வித்தியாலயம்), ம.சிந்துஜா (தாவடி இ.த.க. பாடசாலை), ந.சிவரூபி (ஏழாலை சைவ மகாஜனா).

**இலக்கணப் போட்டி**

க.மலர்விழி (ஏழாலை சைவப் மகாஜனா வித்தியாலயம்), சி.சிந்துஜா (உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்), க.அருள்ராஜ் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்).

**குறு நாடக ஆக்கம்**

ஆ.சோபனா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்),

**கவிதை ஆக்கம்**

கு.அனுஷா (இணுவில் இந்துக் கல்லூரி), இ.மீரா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், செ.சிவராணி (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்).

**சிறுகதை ஆக்கம்**

க.ஜெயவதனி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), க.சத்தியா (இராமநாதன் கல்லூரி), உ.நிஷாநதி (ஏழாலை மகா வித்தியாலயம்).

**பாவோதல்**

பா.கேமினி (உடுவில் மகளிர் கல்லூரி), சி.வேணுஜா (இராமநாதன் கல்லூரி), செ.சாம்பவி (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்).

**தனி இசை**

சி.லாவண்யா (இணுவில் மத்திய கல்லூரி), க.அருள்மதி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), ஜெ.ஜெயகணா (இராமநாதன் கல்லூரி).

**தனி நடனம்**

சி.சிவதாரணி (இராமநாதன் கல்லூரி), நா.மதுரா (உடுவில் மகளிர் கல்லூரி), வி.வித்தியாதரணி (இணுவில் மத்திய கல்லூரி). (101)

❋

# எகிப்திய இராஜதந்திரி ஈராக்கில் கடத்தப்பட்டார்



(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் எகிப்திய இராஜதந்திரி ஒருவர் நேற்று முன்தினம் கிளர்ச்சியாளரால் கடத்திச் செல்லப்பட்டார்.

வெள்ளிக்கிழமை தொழுகை முடித்துவிட்டு பள்ளிவாசலில் இருந்து வெளியே வந்த மொகமட் மம்ரூ குவெப் என்ற இராஜதந்திரியே கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

ஈராக்கிற்குப் படைகளை அனுப்பும் திட்டத்தினையும், பாதுகாப்பு உத்தரவுகளை வழங்கும் நடவடிக்கைளையும் எகிப்திய அரசு கைவிட வேண்டும் என்று இராஜதந்திரியைக் கடத்திய கிளர்ச்சியாளர்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.

கடந்த வியாழனன்று எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கும், ஈராக்கிய இடைக்கால பிரதமர் இயாட் அலாவியும் ஐ.நா படையில் முஸ்லிம் நாட்டுத் துருப்புக்களை அதிகளவில் இணைத்து ஈராக்கில் பணியில் ஈடுபடுத்துவது குறித்து பேச்சு நடத்தியிருந்தார்கள்.

இந்தப் பேச்சுக்களை அடுத்தே எகிப்திய இராஜதந்திரியை கிளர்ச்சியாளர்கள் கடத்திச் சென்றுள்ளனர். ஈராக்கில் இதுவரை காலமும் பல்வேறு வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்ட போதும் வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் கடத்தப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

இதேவேளை, நேற்று முன்தினம் அமெரிக்கப்படைகள், சுமார் 10-12 தீவிரவாதிகள் அடங்கிய குழு வொன்றின் மீது பலூஜாவில் தாக்குதல் நடத்தினர். இவர்கள் முசாப் அல் - சர்கு வாவி என்ற தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்களெனவும் கூறப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பாக அமெரிக்கப் படையினர் கருத்து எதையும் வெளியிடவில்லை. ஆயினும் 3 சிறுவர்கள் உட்பட 5 பேர் காயமுற்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.




# பொஸ்னிய போர்க் குற்றவாளியான இராணுவக் கப்டன் பிடிபட்டார்!



பொஸ்னியாவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த ஜெனரல் ரட்கோ மில டிக்கின் நெருங்கிய சகாவான இராணுவ அதிகாரி ஒருவர் நேட்டோ சமாதானப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

1992-95 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் பதவியிலிருந்த பொஸ்னியன் சேர்ப் இராணுவத் தலைவரான ஜெனரல் ரட்கோ மிலடிக் அங்குள்ள முஸ்லிம் சிறுபான்மை இனத்தவர்கள் மீது போர்க்குற்றங்கள் புரிந்ததாக குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ளார்.

இவரது செயலாளராகச் செயற்பட்ட பொஸ்னியன் சேர்ப் இராணுவக் கப்டனான ரஜ்கேபண்டுகாவையே நேட்டோ படைகள் கைது செய்திருக்கின்றன.

நேட்டோ படைகள் இவரை அணுகிய போது, வடகிழக்கு நகரான பிஜெல்ஜினாவிலுள்ள தமது குடியிருப்பில் பாதுகாப்பாகத் தங்கியிருந்தார்.

ஜெனரல் மிலடிக்கின் காலத்தில் சரஜீவோ முற்றுகையில் 12 ஆயிரம் சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். அத்துடன், 1995 ஆம் ஆண்டில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கிழக்கு நகரான செர்பெனிக்காவில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க அணு நிலையத்தின்

# கணினி டிஸ்குகள் காணாமற்போனதால் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன!

அமெரிக்காவின் அலமோஸ் அணுவாயுத ஆய்வு நிலையத்திலிருந்து கணினி டிஸ்குகள் காணாமற் போனதையடுத்து, அமெரிக்காவின் அணுசக்தி நிலையத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதுடன், அவற்றுக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அலமோஸ் ஆய்வுநிலையத்திலிருந்து கணனி டிஸ்குகள் காணாமற்போனதையடுத்து, நியூமெக்சிக்கோ நிலையத்தின் 19 ஊழியர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், இவர்களை அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ தனது கண்காணிப்பில் வைத்துள்ளது.

உயர் ரகசிய அணுவாயுதக் கூடத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தக் கணினி டிஸ்குகள் காணாமற்போன சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பிருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்த டிஸ்குகளின் மூலம் அமெரிக்காவின் அணுவாயுத இரகசியங்கள் வெளியில் கசியக்கூடும் என்று கருதப்படுகிறது.

இதனால், அமெரிக்க அணுவாயுத நிறுவனங்களின் பாதுகாப்பு மீளாய்வு செய்யப்படுவதுடன் முக்கியமான நிறுவனங்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க அணுசக்தி செயலாளரான ஸ்பென்சர் ஆபிரகாம், காணாமற்போன டிஸ்க்குகளுடன் தொடர்புடைய அணுசக்தி நிலையங்களை மூடிவிட உத்தரவிட்டிருக்கின்றார்.

டிஸ்குகள் காணாமற்போன ஆய்வு நிலையத்தில், சுமார் 8 ஆயிரம் பேர் வேலை செய்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தனித் தனி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.


## 21 ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 . 09 . 1953



உதிர்வு 25 . 07 . 1983

**கந்தப்பு தருமகுலசிங்கம் (ஜெயம்)**

ஆடிக் கலவரத்தில் அள்ளுண்டு போனவனே!
வீடிழந்து நாடிழந்து நிற்கின்றார் நம்மக்கள்
தேடியலைகின்றோம் தீர்வொன்று வாராதா? - நாம்
பாடிக் குலவுகின்ற நாள் என்று வந்திடுமோ!

நின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பாசமிகு தாயார்,
உடன் பிறப்புக்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்

சாளம்பை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(சி/2778)


# போருக்கும் சரி சமதானத்துக்கும் சரி பாகிஸ்தான் தயாராகவே இருக்கிறது

## முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர்ப் பிரச்சினை தீர்க்கப் படாமல் இந்திய - பாகிஸ்தான் உறவு முன்னேற்றம் ஏற்படாது என பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கூறியுள்ளார். இராணுவமுகாம் நிகழ்ச்சியில், இராணுவ அதிகாரிகளிடையே பேசிய முஷாரப் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது.

இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கு நாம் தயாராகும் பொழுது, அது தொடர்பான நிலையான சட்டங்கள் இயற்றும் பொழுது காஷ்மீர் பிரச்சினைகளைப்பற்றி பேசுவதிலும் முன்னேற்றம் ஏற்படாது.

இந்தியாவுடனான அனைத்துப் பிரச்சினைகளிலும் காஷ்மீர் பிரச்சினை உட்பட சுமுகமான தீர்வையே பாகிஸ்தான் விரும்புகிறது. தேசிய பாதுகாப்பு விடயத்தில் பாகிஸ்தான் நம்பிக்கையான பாரம்பரியத்தன்மையையே பின்பற்றுகிறது.

பிராந்திய அளவில் எங்களை நிலை நிறுத்தத் தேவையான போர் முறைகளை நாங்கள் கையாளவோம். முப்படைகளிலும் நவீன ஆயுதங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துவோம்.

போர் நடத்தவும் அதே சமயம் சுமூக தீர்வு காணவும் பாகிஸ்தான் எப்போதும் தயாராக இருக்கிறது. இதற்காக நாம் சமீபத்தில் போர் ஒத்திகை நடத்தினோம். இராணுவ துணை தளபதி யூசுப்கான் இந்த போர் ஒத்திகையின் இயக்குனராக செயற்பட்டார்.

# றொனால்ட் றீகனின் பெயரில் அமெரிக்கப் போர்க்கப்பல்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் கடற்படைக்கு கடந்த ஆண்டு புதிய விமானம் தாங்கிப் போர்க்கப்பல்ஒன்று சேர்க்கபபட்டது. யு.எஸ்.எஸ் றொனால்ட் றீகன் என்று இந்தக் கப்பலுக்கு பெயரிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மறைந்த அதிபர றீகன் உயிரோடு இருந்த போதே இதன் தொடக்க விழா நடந்தது. ஆனாலும், உடல் நலக்குறைவு காரணமாக றீகன் அப்போது அந்த விழாவில் கலந்து கொள்ளமுடியவில்லை.

இப்போது, அந்தக் கப்பல் பல்வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டு சான் டீகோ துறைமுகத்திற்கு வந்துள்ளது. அந்தக் கப்பலுக்கு றீகன் மனைவி நான்சி றீகன் மற்றும் அவரது குடும்பத்தினர் வரவேற்புக் கொடுததனர். தனது கணவரே தன்னைத் தேடி திரும்பி வந்தது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டதாக நான்சி கூறினார்.

இந்தக் கப்பலில் 6 ஆயிரம் வீரர்கள், 100 இற்கும் மேற்பட்ட குண்டு வீச்சு விமானங்கள் பயணம் செய்யமுடியும்.


## சிறு விளம்பரம்

**சிவசாந்தி இலகு திருமண சேவை**

இயற்கையினாலும், இடம் பெயர்வினாலும் பிற இடங்களில் உள்ளோர் சொந்த முகவரிகளையும் இணைத்து எழுத்துமூலம் தொடர்புகொள்க. (ஐந்து தபால் முத்திரைகளையும் இணைத்துவிடுக). திரு.திருமதி வே.கெ.தனபாலன் நுணாவில் சாவகச்சேரி அல்லது 81/1 சூசைப் பிள்ளையார்குளம் வவுனியா. (782)

**நாகம்ஸ்** சுன்னாகம்




சிம்பு, ரம்யா, கருணாஸ், மனோரமா நடித்த

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

M.G.R. இரு வேடங்களில், லதா, மஞ்சுளா மற்றும் நம்பியார் நடித்த

**நினைத்ததை முடிப்பவன்**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே) காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)

Random Hearts

(சி-2723)

## பிள்ளையார் விடுதி உணவுப் பூங்கா

குளிரூட்டப்பட்ட மண்டபங்கள் 150-300 பேர் வரை அமரக்கூடிய இருக்கை வசதிகள் விசாலமான வாகனத் தரிப்பிடம் முதலியவைக்கும்

- திருமணங்கள் (Wedding)
- மகாநாடுகள் /கருத்தரங்குகள் (Conferences and Discussions)
- திருமணப் பதிவு (Registration)
- தொழிலக வைபவங்கள் (Business Lunch)
- ஒன்று கூடல்(gettogether))
- விருந்துபசாரங்கள்
- பிறந்தநாள் வைபவங்கள்
- பூப்புனித நீராட்டு வைபவங்கள்

போன்ற வைபவங்களுக்கு சுத்தமான, சுவையான உணவுடன் தரமான சேவையுடன் திறந்தவெளிப் பூங்காவில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். எங்களிடம் வாகனத்தரிப்பிடம், குளிரூட்டப்பட்ட வாகனவசதி, குளிரூட்டப்பட்ட அறைகள், இணைந்த குளியலறைகள். Out door catering also will be undertaken. விசேட வைபவங்களுக்கு நீங்கள் விரும்பும் இடத்திற்கு வந்து உணவு பரிமாறப்படும். சகல விடயங்களுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம் -

பிள்ளையார் இன் (Pilliarinn, Pilliar Garden Restaurant)

விபரங்களுக்கும், முன்கூட்டிய பதிவுகளுக்கும் தொடர்புகொள்ளவும் அத்துடன் யாழ்.கொழும்பு விமானப் பதிவுகளும் மேற்கொள்ளப்படுகிறது.

முகாமையாளர்
பிள்ளையார் ஸ்ரோர்ஸ் (Inn) T,P 021 - 222 - 5595 FIX 021 - 222 - 5595
31, மானிப்பாய் வீதி, T,P 021 - 222 - 2829 Emial : Piyarinn @ sltnet.lk
யாழ்ப்பாணம் (சி/2776)

## கோடைகால ஜில்சொப்பிங்

முகூர்த்தப்பட்டுச் சாறிவகைகள்

வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்

- சாறிவகைகள்
- ரவுசர்த்துணி வகைகள்
- சேட், T சேட்
- ஜம்பர்வகைகள்
- சூட்வகைகள்
- டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள்
- கவுண்வகைகள்
- கோட்சூட்
- ஸ்கேட் & பிளவுஸ் வகைகள்
- பேபி கவுண் வகைகள்

போன்றவற்றை பெற்றுக்கொள்ள

தரமாகவும் மலிவாகவும்

**மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்**

இல. 10, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

T.P.0214590174

(சி/2779)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கள்ளுத்தவறனை முறுகல் கோஷ்டி மோதலாக வெடித்தது

## மந்துவில் பகுதியில் சம்பவம்

(தென்மராட்சி)

கள்ளுத்தவறணையில் ஏற்பட்ட மோதல் தென்மராட்சி மந்துவில் பகுதியில் பெரும் கோஷ்டி மோதலாக வெடித்ததில் இருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் மந்துவில் பகுதி கள்ளுத்தவறணையொன்றில் ஏற்பட்ட வாய்த்தகராறு காரணமாக அப்பகுதியில் முறுகல் நிலை ஏற்பட்டது.

தொடர்ச்சியாக நிகழ்ந்துவந்த இந்த முறுகல் நேற்று நண்பகல் இரு தரப்புக்கும் இடையேயான கோஷ்டி மோதலாக உருவெடுத்தது.

இந்த மோதலில் வாள்கள், கத்திகள், பொல்லுகள், உள்ளிட்ட ஆபத்தான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல்களில் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தோரில் சிவானந்தம் சசிகரன் (வயது 20) என்ற இளைஞரும் அடங்குவதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் நிலைமையைத் தமது கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளதுடன், மேலதிக பாதுகாப்பையும் வழங்கி வருகின்றனர்.

அத்துடன், மோதல்களுடன் சம்பந்தப்பட்டோரைக் கைதுசெய்ய வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும், சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஐந்து சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது (34)

# உலகின் முதல் வெள்ளை யானை ஜால காட்டில் கண்டுபிடிப்பு!



(கொழும்பு)

ஜால சரணாலயப் பகுதியில் வெள்ளை யானையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இதுவே உலகின் முதலாவது வெள்ளை யானை எனவும், வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜால சரணாலயப் பகுதியில் இந்த யானை வனவிலங்கு ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது உறுதிப்படுத்தப்படுவதாக, வன விலங்கு ஆராய்ச்சித் திணைக்களத் தலைவர் டொக்டர் பிரிவிராஜ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த யானை பெண் யானை எனவும், இதன் வயது 11 வருடங்களாக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. இந்தப் பெண் யானை மற்றைய 16 பெண் யானைகளுடனேயே சேர்ந்து திரிகின்றது.

தற்போது இந்த யானை இனப்பெருக்கக் கட்டத்தை அடைந்துவிட்டதெனவும், ஏற்கனவே இது கர்ப்பமாக இல்லாவிட்டால், அடுத்த சில வருடங்களில் இந்த யானை கர்ப்பம் தரிக்கும் வாய்ப்புள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

1993 ஆம் ஆண்டு இந்த யானைக் குட்டி பிறந்த சிறிது நாட்களில் கீன வெவ பகுதியில் கண்டதாக டாக்டர் பெர்னாண்டோ தெரிவித்தார். பின்னர் 1996 ஆம் ஆண்டு இந்தக் காட்டுப் பகுதிக்குச் சென்ற சிலர் குறித்த யானை வேறு சில யானைகளுடன் நீருக்குள் நிற்பதனைக் கண்டு படமெடுத்து வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# தனியார் கல்வி நிறுவனங்களை மூடக் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

கறுப்பு ஜூலைத் தினத்தையொட்டி இன்று குடாநாட்டில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவிருப்பதால், தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுள்ளது.

கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு இன்று அனுஷ்டிக்கப்படும் துக்க தினத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாட்டை நிறுத்துவதோடு, பூரண ஆதரவு வழங்குமாறு யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுள்ளது.

## கல்வியற் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்றோருக்கு அடுத்த மாதத்தில் நியமனம்

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம்பெற்ற அனைவருக்கும் அடுத்த மாத நடுப் பகுதியில் கல்வி அமைச்சு ஆசிரிய நியமனங்களை வழங்க விருக்கிறது.

இந்த வருடம் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2507 பேர் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுள்ளனர்.

சகல மாகாண அத்தியட்சகருக்கும் நியமனம் பெறுவோரின் பெயர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# குழு மோதல்களில் மூவர் பலி!

(கொழும்பு)

வீராகொட்டிய பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் மூவர் உயிரிழந்ததுடன், மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலிலேயே மூவர் உயிரிழந்தனர். நீண்டகாலப் பகையே மோதலுக்குக் காரணமென பொலிஸார் தெரிவித்தனர்.

## முஸ்லிம் குடும்பஸ்தர் ஒருவர் அம்பாறையில் அடித்துக்கொலை

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனைக் கிராமத்தில் முஸ்லிம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் அடித்துக்கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் சம்மாந்துறை உடங்காய் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த யூசு லெப்பை பாவா என்பவரே அடித்துக் கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வீரமுனைப் பகுதியில் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்யும் பெண்ணொருவர் வீட்டில் மது அருந்தியதாகவும், பின்னர் - அங்கிருந்து வெளியேறிய பின்னர் இவர் அடித்துக் கொல்லப்பட்டதாக விசாரணை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். (07)

# தாய்மடியில் தாலாட்டு ஒலிப்பேழை வெளியீடு

(வவுனியா)

"தாயின் மடியில் தாலாட்டு" என்ற ஒலிப்பேழை வெளியீட்டு விழா நேற்று மாலை நான்கு மணியளவில் வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றினார். தேசியக் கொடியை அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தலைமையில் வெளியீட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் வரவேற்புரையினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை நிகழ்த்தினார்.

இதன் பின்னர் ஒலிநாடா வெளியிட்டு வைக்கப்பட்டது. தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சய் ஒலிநாடாவினை வெளியிட்டு வைக்க, போராளி, மாவீரர் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் ஒலிநாடாவினைப் பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சிறப்புரைகளை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினா க.வே.பால[illegible]மாரன், கலைபண்பாட்டுக் கழக[illegible] பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இருவரும் ஆற்றினர். நூலுக்கான மதிப்பீட்டுரையை விந்தன் ஆற்றினார்.

இதன் பின் கலைஞர்களுக்கான பரிசில்களை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கிக் கௌரவித்தார்.

# சமாதானப் பேச்சுக்கள் குறித்து தீர்மானம் எடுக்க கூடுகிறது ஆளும்கட்சி நிறைவேற்றுக்குழு!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக தெளிவான தீர்மானத்தை எடுப்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழு அடுத்த மாதம் இரண்டாம் திகதி விசேட கலந்துரையாடலை நடத்தத் தீர்மானித்துள்ளாக, சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விசேடமாக-கட்சியில் தோன்றியுள்ள பலவித கருத்துக்கள் குறித்து, இந்தக் கூ[illegible]டத்தில் கலந்துரையாடப்படவுள்[illegible]தாக அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசு, சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக நிறைவேற்றுக் குழு எடுத்த தீர்மானம் வெளியிடப்படும் எனவும், அவர் தெரிவித்தார். (01)

## இரு துப்பாக்கி...

நபர்கள் விசாரணைக்கு வாருங்கள் என்று அழைத்துச்சென்று இந்தக் கொலையைச் செய்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். தலையில் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் இவரது சடலம் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை, இன்னொரு சம்பவத்தில் பாண்டிருப்பு மயானத்தில் வாய்க்குள் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இளைஞன் சடலம் நேற்று அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டது.

சிதம்பரபிள்ளை துஷ்யந்தன் (வயது25) என்பவரது சடலமே அது என அடையாளம் காணப்பட்டது. அவரும் மண்டூரைச் சேர்ந்தவர்.

கல்முனைக் கட்டடத்திணைக்களத்தில் தற்காலிக ஊழியராகப் பணியாற்றுகின்ற இவர் விடுதியில் தனியாக தங்கி இருந்தார் என்றும், அங்கிருந்து கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டாதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலத்துக்கு அருகே கையடக்கத்தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டது.

இந்த இரண்டு கொலைகளுக்கும் ஒன்பது மில்லி மீற்றர் கைத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன. கொலையாளிகள் யாரென இது வரை அடையாளம் காணப்படவில்லை.

பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள், சிறுவர் கடத்தல் போன்றவற்றுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்று மாலை அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தேச விரோத சக்திகளால் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தச் சம்பவங்கள் விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டு வருவதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இவை கண்டனத்துக்குரியது எனத் தெரிவித்த குயிலின்பன் இத்தகைய கீழ்த்தரமான சம்பவங்களில் விடுதலைப்புலிகள் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள் என்றும், எமது தலைமை அதற்கான அனுமதியை எந்தச் சந்தர்ப்பத்திலும் தரப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன், திட்டமிட்டுக் குழப்பும் தீய ஆயுதக் குழுக்கள் இங்கு இயங்கி வருகின்றன என்றும், இவர்கள் பற்றிய தகவல்களை அருகிலுள்ள அரசியற்துறை அலுவலகத்தில் தருமாறு மக்களை அவர் கேட்டுக் கொண்டார். (07)

## அனைத்துக் கட்சிகளுடனும்...

இதற்கான நடவடிக்கைகளை இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் மேற கொண்டு வருகின்றது.

இதனைத் தொடர்ந்து ஏனைய தேசியக் கட்சிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படும் என நோர்வே தரப்பு தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்த வேண்டுமென ஜனாதிபதி தலைமையிலான ஆணைக்குழு கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து நோர்வே அரசு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் உள்ள அரசியற் கட்சிகள் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினை தொடர்பாக, தெரிவித்துவரும் கருத்துக்களால் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் எனக் கருதியே அரசு இந்தக் கோரிக்கையை நோர்வேத் தரப்பிடம் விடுத்திருந்தது.

இந்தக் கருத்து மோதல்களைத் தீர்த்து வைப்பதற்காக ஒரு சர்வ கட்சி மாநாட்டை நடாத்துவதற்கு முன்னேற்பாடாகவே நோர்வே அரசு அனைத்து சிறிய அரசியற் கட்சிகளையும் தனித்தனியே சந்தித்துப் பேச்சுக்களை நடத்த உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 9 ஆயிரம்....

மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்காகவும் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டதாரிகள் இரண்டாவது மொழியாகச் சிங்களத்தையோ, தமிழ் மொழியினையோ கற்றிருந்தாலேயே இந்த நியமனம் சாத்தியமாகும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (தே)

## கதிர்காமம்...

காயமடைந்த 8 பேர் தெவரகஸ் வெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்பு மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

உயிரிழந்தவர்களில் 5 ஆண்களும் 4 பெண்களும் சிறு குழந்தை ஒன்றும் அடங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## வன்முறைகளை...

கூறமுடியாது.

வன்முறைகள் முற்றாக நிறுத்தப்பட்டால் மட்டும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கமுடியும். சமாதான முயற்சிகளுக்கும், வன்முறைகளுக்கும் இடையில் பயணம் செய்ய முடியாது என்பதை இரு தரப்பினரும் உணர்ந்துகொள்ள வேண்டும். சிறிய அளவில் சமாதானத்தையும் வன்முறையையும் கொண்டிருக்க முடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சென்னை விமான...

9.30 மணியளவில் கட்டுநாயக்கா நோக்கிப் புறப்பட்ட விமானத்தில் ஈழவேந்தன் திருப்பியனுப்பப்பட்டார். இவர் நேற்றிரவு 10.30 மணியளவில் கொழும்புக்கு வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாகத் தமிழகத்தில் தங்கியிருந்த ம.க.ஈழவேந்தன் 2000 ஆம் ஆண்டில் இந்தியத் தூதரகத்தால் நாடு கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (01)

# மரண அறிவித்தல்

## பெரியதம்பி வைரவிப்பிள்ளை

புலோலி தெற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும், கண்டியை வசிப்பிடமாகவும்கொண்ட பெரியதம்பி வைரவிப்பிள்ளை (24.07.2004) சனிக்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி, கோணாத்தைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, நாகம்மா, ஆழ்வாப்பிள்ளை, பொன்னையா, வைரமுத்து, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசம்மா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (26.07.2004) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது பிறந்த இடமான புலோலியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கோ.நடராசா
(நாவலர் புத்தகசாலை)

*புலோலி தெற்கு,*
*புலோலி*

(C /2780)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.